V 5 . NO 18 5 May 1932.

3C
052:11, N28K4
N132.5.18
188966

KALANILAYAM

தனிப்பிரதி விலை, அணா மூன்று

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 5.] 1932 ஞு மே மீ 5உ [No. 18

பொருளடக்கம்.

1.	தலையங்கம் (Leader)	341
2.	குன்றுடையானும் மக்களும் — W.V. கோவிந்தசாமி ராஜு B.A.,L.T.	343
3.	நம்மாழ்வார் வைபவம் (2-ம் பத்து 9-ம் தசகம்) — K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L.	344
4.	அப்பர் (64 கலை—தர்க்கம்—சப்தப்ரமாணம்) — E. N. தணிகாசல முதலியார் B.A. B.L.	347
5.	ஜூலியஸ் ஸீஸர் (அங்கம் 3. களம் 1.) — ஷேக்ஸ்பியர் நாடகம்	349
6.	தமிழ்ப்பாடம் — நளவெண்பா - சுயம்வரகாண்டம்	351
7.	கம்பராமாயணம் (சூர்ப்பணகைப் படலம்) — T. N. சேஷாசலம் B.A. B.L.	355
8.	வர்த்தமானம்	359

கலாநிலயம்

வித்தகமோ விதிவசமோ. 10.

புறவாழ்க்கையை நாம் புழுவாழ்க்கைக்கு நிகரென்று செப்பியன வேண்டாவழி வன்சொற்களென்ன எண்ணுதற்கு நியாயமில்லை. இனியன உண்பதும் மெல்லெனத் துயில்வதும் அணிவன அணிவதும் உலகத்திற் றலைவர்களென உலாவருவதும், இடம் பொருள் ஏவல்களைக் குறைவற எய்துவதும், இன்னோரன்ன இம்மைக் கியன்றவற்றில் முயற்சியுடையரா யிருப்பதனைத்தும் புழுவின் நிலைமைக்கே இழிக்கின்ற வாழ்க்கை எனப் பேசிவிட்டால் பின் மனிதப் பிறவியால் பெறுதற் கெஞ்சிய பயன் மிகச் சிறியதே என ஏசறவு எய்திநிற்பார்க்கு ஒன்று யாமிங் குணர்த்தப்புகுவது மிகையன்று. உண்ணமல் உடுக்காமல் உவந்தொன்றும் முயலாமல் இவையனைத்தும் அவமே என்று விட்டோடிவிடவேண்டுமென்று யாம் ஒருவருக்கும் இயம்பவில்லை. புறவாழ்க்கைக் குரியவாய் விவகரிக்கும் அனைத்தும் புன்மையுட்டானே புகுத்திவிடும் என்ற நியதியுமில்லை. சிற்றின்பங்கள் என்று செப்பப்பெறுவனவற்றைத் துய்ப்பினுந் துய்க்கலாம். ஐம்புலன்களின் அவா அவ்வளவும் அடங்கியே தீர்தல்வேண்டும் என்பதற்கு ஏற்றபெற்றிப் புறநடைகள் இருப்பதும் இயலும். எம்பெருமான் எண்ணருங்காலம் இனிதிருந்து அரசுசெலுத்துவான் திருவுளங்கொண்டு அவதரித்த அந்நாள்,

நந்தன வனத்தலர் கொய்து நவ்விபோல்
வந்திளை யரோடு வாவி யாடிவாய்ச்
செந்துவ ரழிதரத் தேறன் மாந்திச்சூ
துந்தலிற் பொழுதுபோஞ் சிலர்க்கத் தொன்னகர்

[அப் பழைய அயோத்தி நகரத்தின்கண் சிலருக்கு,நந்தன வனங்களில் மலர் கொய்து விளையாடி, மான்போல் வந்து மாதர்களுடன் தடாகங்களில் நீர் விளையாடி, வாயின் செந்நிறம்மாறி வெளுக்கும் வரையில் மதுவைக்குடித்துப், பிறகு சூதாட்டங்கள் ஆடுவதில் பொழுது போகும்]

என்று தொடுத்துக்கூறிய கம்பர் ஒன்றுந் தெரியாதவரல்லர். முழுவாழ்க்கை வாழத்தெரிந்த மக்களுக்கு இஃதனைய புறவாழ்க்கைக்கும் வேண்டிய இடமுளது. இவ் விரகசியத்திற்குத் திறவுகோல் யாதெனத் தேடப் புகுவார் அவரவர் அநுபவக்கொத்தினை ஆராய்வாரெனின் அடைந்தவராவார். உலகத்தில் உழல்வது வேறு, உலகத்தில் வாழ்வது வேறு. உழல்வார் வாழ்வார் என்னும் இவ் விருதிறத்தோரும் புறவாழ்க்கை ஒழுக்கத்தில் மேற்பார்வைக்கு ஒரு படித்தாய்த் தோன்றலாமெனினும், உள்ளுற நோக்குங்கால் உண்மையாய வேற்றுமையொன்று புலப்படும். விடருந் தூர்த்தரும் காமக்கள்வரும் கள்ளுக்குடியரும் கவறுகொள் கயவரும் தம் தனிப்பெரும் புகலிடமென மொய்த்தியங்கும் மாண்டி கார்லோ (Monte Carlo) என்னும் பெயரதாய் ஐரோப்பாவில் இருக்கின்ற இடத்தைப்பற்றிப் பலர் அறிந்திருக்கலாம். கம்பர் ப்ரசுரத்தைக் கருதுங்கால், அதன் தற்கால மொழிபெயர்ப்போ இம் மாண்டிகார்லோவில் வழங்கிவரும் செய்திகள் என மயங்கவேண்டிநேர்கின்றது. இங்கிம் மாண்டி கார்லோவிற்கு அங்கவ் வயோத்தி அயலாவதெங்ஙனம் ?

மாண்டி கார்லோவில் மொய்க்கின்ற மாக்களும் அயோத்தியில் வாழ்வுவைகிய மாந்தரும் ஓரினத்தவர்

அல்லர். அயோத்தியில் அவ்வணம் அவர் பொழுதினைப்போக்குவார்; மாண்டி கார்லோவில் பொழுது இவர்களை இவ் வண்ணம் போக்கும். ஆதலின், செய்பவற்கும் செயப்படு பொருளிற்கும் உள்ளவோர் வேற்றுமை இவ்விருதிறத்தோர்க்கும் இடையே கிடக்கின்றது. சிற்றின்பமென்னுஞ் சாதியிற் சேர்ந்த செய்திகளை ஏற்று அனுபவிக்க வருபவன் ஒருவன் அவை சிற்றின்பங்களே என்பதை ஐபந்திரியறத் தேர்ந்துதெளிந்து அவைகளுக்குரிய மனப்பான்மையில் அநுபவிப்பானாயின் குறையொன்றும் பெரிது அதனால் நேர்ந்திடாது. அன்னவன்தான் பொழுதினைப் போக்குகின்றவன் என்பதற்குரியவன். இவ்வாறின்றிச் சிற்றின்பங்களில் வீழ்கின்றவர்களை வெவ்வேறு இருவகையினர்களாய்ப் பிரிக்கலாம். இதனை உணர்வதற்கே, நாம் சற்றுமுன் இங்குச் சொல்லியபடி, அவரவர் தத்தம் அநுபவக் கொத்தினை ஆராய்ந்து ஓர் திறவுகோல் தேடி எடுத்துக்கொளல் வேண்டும். சிற்றின்பங்களில் மிகத்தாழ்ந்தனவாகிய கள் காமம் கவறுகளில் விழுபவர்தம் மனநிலையைச் சற்றே சோதித்தால் இங்கு இயம்பவரும் விடயம் எளிதிற் புலப்படும். புனிதவாழ்க்கையொன்றுளதென்றேனும், அவ்வாழ்க்கையின் வைகியவர்க்குரிய அமைதியின்ப நலங்களையேனும் அறிந்துகொள்வதற்கும் பயின்றிராத ஒருசாரார் தம்மையேகொண்டு தாம் என்ன செய்துகொள்வதென்பது தெரியாமல், சாரும்வரை குறியாமல் தம் நிழலைத்தாமே அளக்கமுயல்பவர்முன் அந்நிழல் படர்வதுபோல் படர்கின்ற தம் அவாக்களைப் பின்தொடர்ந்து, கள்ளுங் காமமும் கவறுங் கண்டவிடத்து நுழைகின்றவராகின்றார். பிறகு இவைகளுக்குரிய கேடுகள் அழையாவிருந்தாய்த் தாமே வந்து சேர்கின்றன. இன்னவர்க்கு, இக் கள் காமம் கவறு முதலியவைகளை நாடுவதும் அவைகளால் வருந் துன்பங்களுக்குடைந்து வருந்துவதும் அன்றி வேறோர் சிந்தனையேனுஞ் செய்கையேனும் இல்லை. ஆதலின், எல்லாருங் காண இவர் உழல்கின்ற இப் புறவாழ்க்கைச் செய்திகளைத் தவிர, அவரே யறிந்துவைகுகின்ற உள்வாழ்க்கை குரியன ஒன்றும் அவர்பால் காண்பதரிது. வாழ்நாளை இவர் வீணாகப் போக்குகின்றார் என்றுரைப்பது முற்றிலும் நேரிதன்று. இவர்களால் அவர்தமக்கேயேனும் பிறர்க்கேனும் யாதும் பண்பும் பயனுமில்லையென வெறுத்து நிற்கின்ற காலந்தான் இவர்களை இவ்வண்ணம் வீணாகப்போக்கிவிடுகின்றது என்னல்வேண்டும். தானே மண்ணை உண்ண மீண்டுமம் மண்ணே தன்னை உண்ணக் கிடக்கின்ற இன்னவர்தம் வாழ்க்கை புழுவாழ்க்கை எனப்படுவதற்கு ஏதேனுஞ் சங்கையுண்டோ! பொழுதினால் போக்கப்படுபவர் இவர். வெளிப்படையாய் யாவருக்குமெளிதில்தெரியவேண்டுமென்பது பற்றியே, கள்கவறு காம ஒழுக்கங்களை உதாரணமாய் எடுத்துக் கூறினோம். மற்று, வருவாய் தேடியலைவதும், உண்பதும் உடுப்பதும் உறங்குவதும் வர்த்தமானப் பத்திரிகைகள் படிப்பதற்குமே நேரமில்லையே என்று ஏங்குவதுமாய் விவகரிக்கின்றவர்களும் இந்த இனத்தையே சேர்ந்தவர்களன்றி வேறல்லர். புறவாழ்க்கையன்றி இவர்களும் வேறொன்றறியார், அதற்குரிய ஆசையும் இல்லாதவர்.

கள்ளுங் காமமுங் கவறும் உண்டு வேண்டிக் கைக்கொள்வாரில் மற்றொருசாரார், அவைகளை விழைந்து பின் செல்வாரலர். பண்புடைய பெருவாழ்க்கை எதுவென்று நேரே தெரிந்து அதன்படி ஒழுகுகின்ற மனத்திட்பமில்லாமையால், எல்லோரும் தன்னுடைய சுகத்தைச் சாதித்துவைப்பதற்கே இருப்பதுபோல் பாவித்து, எத்துணை வலிந்தும் முயன்றும் சுகம் ஒன்றும் நேராமையால் மனங்கைத்துத் தம்மையே தாம் மறந்திருக்கும் வண்ணம் கள்ளிலுங் காமத்திலும் கவறிலும் முழுகிக்கிடந்து ஒளிந்துகொள்ளும் பேதையர்கள் இவர். தன்னொடு தானே தனியாயிருக்க அஞ்சுகின்றனர். எதனில் வீழ்ந்து எதனால் தப்பலாம் என்ற ஏக்கத்தில், கள்ளுங் காமமும் கவறும் விரிக்கின்ற வலைகளெல்லாம் இவர்களுக்குப் புகலிடமாய்த் தோன்றுகின்றன. முன்கூறிய இனத்தவர், சிற்றின்பங்களை, சிற்றின்பங்களே என மதியாமல், அவைதாமே வாழ்க்கையின் முழுப்பயனும் என முயலும் மூடர்களென்னின், இவர் சிற்றின்பங்களை இன்பமென்றேனுங் கொள்வதின்றி அவைகளைத் தம் துன்பங்களைச் சற்றே மறந்திருக்குஞ் சாதனங்களாய்க் கருதி யுழல்கின்ற ஏழைகள். குடிப்பதும் வேசியரை நாடித்திரிவதுமாய்க் கெட்டலைந்த தன் மைந்தனை நோக்கி ஒரு தந்தை, "அப்பா, இவைகளை நீ இன்பமாகக் கருதி நாடுகின்றாயா என்பதை நீ உன் மனதையே சோதித்து உண்மையாகத் தேர்ந்துகொள். இன்பமென்றே நீ நிச்சயமாய் நம்பி இவைகளை விழைகின்றாயென்று உன் நெஞ்சு உனக்குக் கூறுமாயின் அப்புறம் நான் உன் ஒழுக்கத்தினைத் தடுத்து ஒரு சொல் இயம்பமாட்டேன். மற்று, துன்பத்திற் காற்றாமல் தோற்று வீழ்கின்ற பாழுங்குழிகளே இவை என்ன உன் மனம் உரைக்குமாயின், இவைகளைக் கடக்க யான் வேறோர் வழி சொல்கின்றேன்" என்று பரிவுடன் பேசினானென எம் நண்பரொருவர் எம்மிடம் கூறினார். அறிவுடையதந்தையிவர் அவல வாழ்க்கையின் உள்ளத்தைஆராய்ந்துகொண்ட நுண்மதியினர் என்பதில் ஐயமில்லை. இவர் மைந்தனைப் போன்று உலகத்தில் உழல்பவர் பொழுது போக்குவாரல்லர். இவர்களையும் பொழுதுதான் செலவு செய்துவிடுகின்றது. அயோத்திமாந்தரோ, அலர் கொய்து, வாவியாடி, தேறல் மாந்திச் சூது உந்தலிற் பொழுது போக்கினர். அவர்களுக்கு உள்வாழ்க்கை வேறொன்று இருந்தது. அவ் வுள்வாழ்க்கையின் உணர்ச்சிஇருக்குமெனின் புறவாழ்க்கையின் செய்திகளெல்லாம் ஆன்மாவில் ஒட்டாமல் அரும்பும் போதே உதிர்ந்துவிடும்.

ஆதலின், சுகங்களை விரும்பி அநுபவிப்பவர் போல் தோன்றும் வித்தகர்கள் திறத்தினை மயக்கற நாம் உணர்ந்துகொள்ளற்கு இவ்வுண்மைகள் நம் மனத்தில் இருக்கவேண்டும். இவையொன்றும் அவர் உள்வாழ்க்கையை உற்றிடாது. இனி, வித்தகர்கள் துக்கமும் அநுபவிப்பவர்போல் தென்படுகின்றனர். அதன் தன்மையையும் பிறகு இங்கே சோதிப்போம்.

குன்றுடையானும் மக்களும்

இரண்டாம் புத்தகம் — 2. அண்ணன்மார் கலியாணம்

[324-வது பக்கத் தொடர்ச்சி]

I

அண்ணன்மாருக்கும் தங்கைக்கும் வயது பன்னிரண்டு ஆயிற்று. குன்றுடையானும் தாமரைநாச்சியும் கிழத்தன்மை எய்தினமையின் தாம் இறக்குமுன் அண்ணன்மாருக்குக் கலியாணம் செய்வித்துக் கண்குளிரப் பார்க்கவேண்டுமென்று விரும்பினர்.

ஒருநாள் குன்றுடையான் தன் மனைவியை நோக்கி, 'தாமரை, நமக்கோ வயது முதிர்ந்தது. நாம் இறப்பது இன்றோ நாளையோ அறியோம். நம் ஆண்மக்களும் வாலிபர்களாய் மணப்பருவத்தை யடைந்திருக்கின்றார்கள். இனி நாம் அவர்களுக்குக் கலியாணம் முடிக்க வேண்டாமா?' என்றான்.

'நீங்கள் சொல்வது உண்மையே. எனக்கும் இந்தக் கவலை சிலமாதங்களாய் உண்டு. இனி விரைவாய்க் கலியாணத்தைச் செய்துவைப்பது நமது கடமையே' என்றாள் தாமரை.

'பெண்கள் எங்கே?' என்றான் குன்றுடையான்.

'பெண்களுக்கு என்ன குறைவு? என் தம்பியர் வீட்டில் இரு பெண்மக்கள் வளர்கிறார்கள். அவர்கள் உரிமைப்பெண்களாய் இருக்க நாம் வேறுபெண் தேட வேண்டியதில்லையே' என்றாள் தாமரை.

'அப்படியானால் நான் போய்ப் பெண்கேட்டு வருகிறேன்' என்றான் கணவன்.

'நாளை நல்லநாள். நாளையே புறப்பட்டுப் போய்வாருங்கள்' என்றாள் மனைவி.

மறுநாள் குன்றுடையான் பத்துப்பெயர்குடிமக்களை யழைத்து விருந்துசெய்து நல்லமுகூர்த்தத்தில் பிள்ளையார்கோவிலுக்குச் சென்று, சாமிகும்பிட்டு, குடிமக்களோடு வெள்ளிவளநாட்டுக்குப் புறப்பட்டான்.

காடு கடந்து, மலைகடந்து, மூன்றாம்நாள் மாலைப் பொழுதில் குன்றுடையான் குடிமக்களோடு மைத்துனர்கள் வீட்டை யடைந்தான். மைத்துனர்கள் அவரைத் தக்கபடி வரவேற்று உபசரித்து விருந்துசெய்வித்தார்கள். விருந்து முடிந்ததும் சந்தன தாம்பூலங்கள் பெற்றுக்கொண்டு குன்றுடையான், 'மைத்துனர்களே, உங்களுக்கு மணப்பருவமடைந்த கன்னியர் இருவர் உண்டென்றுணர்ந்து உங்கள் அக்காள் பெண் கேட்டு வரும்படி எங்களை அனுப்பினாள். எனக்குப் புத்திரர் இருவர் இருக்கின்றனர்' என்றான்.

இதுகேட்ட மைத்துனர்கள் வியப்புற்று, 'அக்காளுக்கு ஆண்மக்களுண்டா? நாங்கள் கேள்விப்படவில்லையே. தத்து எடுத்துக்கொண்டீர்களோ?' என்றார்கள்.

கூடவிருந்த குடிமக்கள், 'இல்லை, இல்லை. மக்களில்லையென்று கணவனும் மனைவியும் பத்து வருடம் தவஞ்செய்து வரம் வாங்கி வந்தனர். இப்பொழுது அவர்களுக்கு இரு ஆண்மக்களும் ஒரு பெண்பிள்ளையும் இருக்கிறார்கள். ஆண்மக்கள் வரத்தாற் பிறந்தவர்களாதலால் அவர்களுடைய வீரமும் அறிவும் சொல்லுந்தரமல்ல. நீங்கள் கண்ணை மூடிக்கொண்டு உங்கள் பெண்மக்களை அவர்களுக்குக் கொடுக்கலாம்' என்றார்.

அதுகேட்ட மைத்துனர்கள் விலகிப்போய்த் தம்தம் மனைவியரோடு கலந்து ஆலோசித்துத் திரும்பிவந்து பெண்கொடுக்கச் சம்மதித்தனர். முகூர்த்தம் வருகிற வைகாசிமாசம் பதினைந்தாந்தேதி சுக்கிரவாரமென்று தீர்மானித்தார்கள்.

'பதினைந்தாந்தேதி நாங்கள் மாப்பிள்ளைமார்களோடு வந்து விடுவோம். நீங்களும் கலியாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாவற்றையும் செய்துவையுங்கள்' என்று சொல்லிக் குன்றுடையான் மைத்துனர்பால் விடைபெற்றுத் தன் நண்பர்களோடு சிற்றூலைப் பட்டணத்திற்குப் புறப்பட்டான்.

தன் ஊரையடைந்து குன்றுடையான் மனைவிக்கு நிகழ்ந்தவற்றைக் கூறுதலும் அவள் கேட்டு மகிழ்ந்தாள். பின்பு குன்றுடையான் திருமுகம் எழுதிப் பல ஊர்களுக்குப் அனுப்பி, சிற்றூலைப்பட்டணத்தில் வீதி அலங்கரித்துத் தன் வீட்டில் பத்தாயிரம் சனங்கள் கொள்ளத்தக்க பந்தலிட்டு வாத்தியகாரர்களை வரவழைத்தான்.

குன்றுடையான் வீட்டிலே வாத்தியங்கள் முழங்குகின்றன. ஆடல் பாடல்கள் நடைபெறுகின்றன. வந்தோர்க்கெல்லாம் விருந்து செய்கிறார்கள்.

பின்பு குலவழக்கப்படி சீர்கள் நடந்தேறின; நாவிதன் வந்து அண்ணன்மாருக்கு முகவேலை செய்தான். தங்கை இணைபோங்கினாள். பெரியண்ணன் சிங்கமுகப் பல்லக்கிலும் சின்னண்ணன் யானைமுகப் பல்லக்கிலும் ஏறிக்கொண்டு, வாத்தியங்கள் கொட்டி முழங்க, கொம்பூத ஊர்வலம் வந்து, பிள்ளையார் கோவிலுக்குச்சென்று தேங்காய் முகூர்த்தமிட்டு, அரண்மனைக்குத் திரும்பிவந்து, தாயோடு ஒரு கலத்தில் உண்டு வெள்ளிவள நாட்டிற்குப் புறப்பட்டார்கள்.

வெள்ளிவள நாட்டில் மாமன்மார் முரசறைவித்து, நாற்றிசையும் வெற்றிலைபாக்கு வைத்து, தங்கள் ஊரை அலங்கரித்துக் கலியாண வீட்டிலே வாழைகமுகு நட்டு வாசலெல்லாம் பந்தலிட்டு, மணவறை சோடித்து, சாவிளக்கேற்றுவித்துப் பட்டுப்பாய் விரித்தார்கள்; சாந்து கதம்பம் தூவினார்கள். மங்கலக்கொம்புகள் ஊதின. பம்பையும் பறையும் முழங்கின.

வைகாசி மாசம் பதினாலாந்தேதி இரவு ஆயிரம் சனங்களோடே அண்ணன்மார், மாமன்மார் ஊர்சேர்ந்து பிள்ளையார்கோவிற் சாவடியில் இறங்கினர்.

மறுநாட்காலையில் சாவடியில் வீற்றிருந்த அண்ணன்மார் கோவிலுக்குமுன்புறத்தில் பண்டைநாள் தாமரை நட்டுவித்த கல்லைக் கண்ணுற்று அது இன்னதென்றறிய விரும்பி, அதை அணுகி, அதிற் பொறித்திருந்த எழுத்துக்களைப் படித்துப் பார்த்தலும், தமது அன்னைக்கு அவள் சுற்றத்தார் செய்த தீங்கை நினைந்து நினைந்து கண்ணீர் வடித்தனர். சின்னண்ணன் சீறியெழுந்து, 'இதோ, இப்பொழுதே நம் மாமன்மாரை இங்கே கொணர்வித்துப் பழிக்குப்பழி வாங்குகிறேன்' என்று வாளுருவினான். பெரியண்ணன் அழுதுகொண்டே தம்பியின் கரத்தைப்பற்றி, 'தம்பீ, பதறாதே

ஆத்திரப்பட்டு நாம் ஒன்றும் செய்தல் கூடாது. நாம் வந்த காரியத்தை முதலில் முடித்துக்கொண்டு பின்பு பழிவாங்க முயற்சி செய்வோம்' என்று சொல்லித் தம்பியைத்தேற்றிப் பத்துச்சேவகர்களைக் கூவிமாமன் மாரைக் கையோடழைத்துவரும்படி ஏவினான்.

மாமன்மார் தம் ஈரற்குலையைக் கையிலே பிடித்துக் கொண்டுவந்து அண்ணன்மாரையும் அங்கு நட்டிருந்த கல்லையும் கண்டு, வெருண்டு, பேச நா எழாதவராய் நின்றனர். சின்னண்ணன் அவர்களை நோக்கி, 'இந்தக் கல்லில் எழுதியிருப்பது என்ன'? என்றான். மாமன்மார் மறுமொழி ஒன்றுங் கூறாது மென்று மென்று விழித்தனர். சின்னண்ணன் கோபித்து, 'எங்கள் தாயாருக்கு நீங்கள் செய்த பழிக்குப் பழி வாங்காமல் நாங்கள் ஒருகாலும் போகமாட்டோம்; உங்கள் மகளிரை நாங்கள் மணந்து சென்று சிறை போடுவோம். இன்னும் ஒரு நாழிகையில் விவாகம் முடியவேண்டும். உடனே விவாகத்தை முடிக்கத் தவறினால் உங்கள் தலைகளை உருட்டுவேன்' என்றான். முகூர்த்தத்திற்கு இன்னும் இரண்டு நாழிகைப்பொழுது இருந்தபோதிலும் மாமன்மார் மறுத்துச் சொல்லமாட்டாதவர்களாய்த் தங்கள் அரண்மனைக்கு விரைந்துசென்று நடந்த செய்திகளை மனைவியர்க்கும் மகளிர்க்கும் எடுத்துரைத்து, அவர்களோடு கோவென்றழுது, மணப்பந்தலுக்கு வந்து முகூர்த்தத்திற்கு வேண்டியவற்றைச் சித்தப்படுத்தினர்.

இதனிடையில் அண்ணன்மார் அவ்வூரின்கண்ணுள்ள தட்டாரிருவரை அழைப்பித்துத் தங்கள் சுண்டு விரல்கள் நுழையும் அளவினவாய்ப் பொன்னால் இரு சுண்டு விரல்கள் செய்து முகூர்த்தத்திற்கு முன் வருமாறு உத்தரவிட்டு, பின்பு உறவினரோடு மணப் பந்தலை யடைந்தனர்.

அண்ணன்மார் தம் மாமன்மாரை விளித்து, 'உங்கள் பெண்மக்கள் முகங்களில் நாங்கள் விழியோம்; எங்களுக்கும் மணமகளிருக்கும் இடையில் திரையிடுக' என்று சொல்லுதலும், மாமன்மாரும் அவ்வாறே திரையிடுவித்துத் தம் மகளிரைக் கொணர்ந்து உட்காரவைத்தனர். பின்பு கரகம் வைத்தனர். அண்ணன்மார் மணமகளிர் கைகளைத் தீண்டினும்பலங்குறையும் என்று தட்டார் கொண்டுவந்த பொற் சுண்டுவிரல்களையணிந்து, அவற்றைப் பிடித்துக்கொள்ளும்படி மணப்பெண்களுக்குக் கையீந்து தாரங்கொண்டனர். கரகம் இறக்கவில்லை, கங்கணமும் வாங்கவில்லை, மற்றைச்சீரும் முடியவில்லை. அதற்குள் அண்ணன்மார் பயணம் பயணம் என்று பந்தலினின்றும் வெளியேறித் தமது உறவினரை அழைத்துக்கொண்டு பொன்வள நாட்டிற்குப் புறப்பட்டனர்.

அண்ணன்மார் ஊர்சேர்ந்த உடனே தம் மனைவியரைச்சிறையிட்டனர். அரண்மனையுட்புகுந்தமனைவியர் மீண்டும் வீட்டைவிட்டு வெளியேறினதும் இல்லை; வெளிமுகங் கண்டதுமில்லை. அவர்கள் தம் கணவர்களோடு பேசினதும் இல்லை; கணவர்கள் அவர்கள் முகத்தில் விழித்ததும் இல்லை. மனைவியர் கணவர்க்குக் கைக்குநீர் வார்த்தறியார்; புறமுதுகு தேய்த்தறியார்; கணவரை எதிர்த்து விழித்தறியார்; அவரோடு ஏகாந்தம் இருந்தறியார். மனைவியர் முகத்தில் விழிப்பினும் பலங்குறையுமென்று அண்ணன்மார், தாம் உயிரோடு இருந்தவரையிலும் சிலம்பப் பயிற்சியிலும் சூதாட்டத்திலும் வேட்டையாடுதலிலும் தம் நாட்களைக் கழிக்கலாயினர். மனைவியரும் தமது விதியை நொந்து, தங்களுக்குரிய வீட்டுவேலையைப் பார்த்துக் கொண்டு சிவனேயென்றிருந்தனர்.

குன்றுடையானுக்கு ஒரு சகோதரி இருந்தனளாம். அவள் மதுரைக்குப் பக்கத்தில் வாழ்க்கைப்பட்டுக் கள்ளழகர் கோவிலில் தவங்கிடந்து மூன்று ஆண்மக்களைப் பெற்றிருந்தனள். அம்மக்களும் ஆண்மையிற் சிறந்தவர்; அவர், வையம்பெருமாள், ஐயம்பெருமாள், அரியபெருமாள் என்றபெயரினர். அம்மூவரும் அண்ணன்மாரைப் பற்றிக் கேள்வியுற்று, சிற்றூலைப் பட்டணத்துக்கு வந்து உறவுகொண்டாடி, அண்ணன்மாரால் ஆதரிக்கப்பெற்று, அவர்களுக்கு உற்ற துணைவராய் இணைபிரியாமல் அவர்களோடு கூடிச் சிலம்பப் பயிற்சியிலும் சூதாடுவதிலும்பொழுதுபோக்குவாராயினர். இம்மூவரில் மூத்தோனை 'அத்தை பிள்ளை மைத்துனன்' என்கிற சிறப்புப்பெயரால் குறிப்பது வழக்கம்.

இன்னும் சில நாட்களிலே, ஐயன் குன்றுடையான் தன் மூத்தமகனுக்கு முடிசூட்ட விரும்பி, சோழமன்னருடைய அநுமதி பெற்று, முரசறைவித்து, குறித்த நாளிலே, நன் முகூர்த்தத்திலே, பத்துப் பெரியோர்கள் முன்னிலையிலே, தனக்குரிய கணக்கு மணிய முதலாயின மிராசுகளை மகனுக்குக் கொடுத்துத் தங்கமுடி சூட்டினான். பொறுமையிற் சிறந்த பெரியண்ணசாமி பொன்னுவள நாட்டிற்குத் தலைவராய், தம்பி சங்கரும் அத்தை பிள்ளைகளாகிய மைத்துனர்களும் தமக்குப் பக்கத்துணையிருக்க அரசுசெலுத்தினர்.

பின் ஒருநாள் குன்றுடையானும் மனைவியும் செல்லாண்டியம்மனைத் தரிசிக்கவிரும்பி அண்ணன்மாரோடு கோவிலுக்குப்போய்ச் சாமிகும்பிடுகையில், இருவரும் உயிர்நீத்து அக்கோவிலிலே பொற்கதவும் பொன்நிலையுமாய் நின்றனர், என்று கதை வழங்குகிறது.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[329-வது பக்கத் தொடர்ச்சி]

2-ம் பத்து 9-ம் தசகம்.

1-ம் பாசுரம்.

எம்மா வீட்டுத் திறமும் செப்பம்நின்
செம்மா பாதபற் புத்தலை சேர்த்தொல்லைக்
கைம்மா துன்பங் கடிந்த பிரானே
யம்மா வடியேன் வேண்டுவ தீதே.

அவதாரிகை:—ஆழ்வார் முன்னொரு தசையில், "களிப்புங் கவர்வு" மென்கிற பாசுரத்திலே தமக்கு எல்லாப் பிரதிபந்தங்களும்நீங்கி, நித்தியஸூரி கழகத்திலே தாமும் கூடிநின்று எம்பெருமானை யநுபவிக்க வேண்டுமென்று அபேக்ஷித்தார். அது கைகூடாமலிற்க, 2-ம் பத்து "ஆடி யாடி" என்ற 4-ம் தசகத்திலே

வியஸநப்பட்டவர், அத்தசகத்தினிறுதியில் "வாட்டமில்புகழ்நாராயணன்" வந்துதோன்றத் தாம் ஸந்துஷ்டராய் 2-ம் பத்து 5-ம் தசகத்தில் "அந்தாமத்தன்பு" துடங்கி எம்பெருமானது கலவி நடந்துவந்தும் தம்முடைய சந்ததியின் அநுபந்திக்களுக்கும் கூட வைகுண்டம் அவன் கொடுத்துவிட்டானென்று உவகை உரைத்திருக்க, இப்போழ்து வைகுண்டத்தின் எவ்விதச் செம்மையையும் செப்பமாட்டேனென்று உதாஸீனமாய் மனக் கலக்கத்துடன் பேசுவதற்கு என்ன காரணமென்றால், எம்பெருமான் திருவடியில் அமர்ந்து ஸதா ஸர்வ காலமும் கைங்கரியம் செய்யவே உத்தேசித்தபடியால் மற்றப் பெரிய புருஷார்த்தத்தையும் தாம் ஒரு பொருட்டாக அவர் நினைக்கவில்லை என்று நாம் கொள்ளவேண்டும்.

எத்தனை மஹத்தான வைகுண்டத்தின் பிரகாரங்களையும் சொல்லோம். அவை நமக்கு உத்தேசமில்லை. சிவந்து நீலமான பாதபதுமத்தை என் சிரசிலே சேரப் பண்ணு. கஜேந்திராழ்வானது துக்கத்தைத் தீர்த்துக் கொடுத்த உபகாரகனே? இதுவே உன்னிடம் யான் யாசிப்பது. மற்றொரு பயன் வேறொன்றும் எனக்கு வேண்டாம்,

குறிப்பு:—செம்மா பாதம் = செம் + மா என்று இரண்டு சொற்கள். கீழே சிவந்து மேலே நீலமணியின் காந்தியையுடைய பாதம். இரண்டாம் பாசுரத்தில் மைவண்ணனென்று வருவதைக் கவனிக்க.

2-ம் பாசுரம்.

ஈதே யானுன்னைக் கொள்வதெஞ் ஞான்று
மைதோய் ஜோதிமணி வண்ண வெந்தாய்
எய்தா நின்கழல் யானெய்த ஞானக்
கைதா காலக் கழிவுசெய் யேலே.

என்றைக்கும் இதுவே யான் உன்பக்கல் கொள்ளும் பிரயோஜநம். நீருண்டிருக்கின்ற கார்மேகம்போல நீலவர்ணமான தேஜஸ்ஸுடைய என்னுடைய பிரபுவே! இப்படி உன் திருவடிகளை யடைய "ஞானக் கை" அதாவது பிரத்தியக்ஷமாய் உன்னைக் காண்பதற்கு ஏற்ற பக்தியோகம் அடியேன் அவலம்பித்துச் செய்யவில்லையே என்று மறக்கவொண்ணாது. அந்தக் "கை" அதாவது உபாயத்தையும்நீ தாமதியாமல் ஈண்டெனக்குத் தந்தருளவேண்டும்.

குறிப்பு:—1 "எய்தா நின்கழல்" பக்தியோகம் ஒன்றுமே பகவானை அடைவிக்கும் உபாயமென்று பகவத்கீதை கூறியிருப்பதை ஞாபக மூட்டிக்கொள்கிறார்.

குறிப்பு:— 2. இப்பாசுரத்தில், எப்பொழுதும் பகவானை மனதால் நினைத்து நிகழ்த்தும் மானச வியாபாரமாகிற பக்தியோகத்தை ஆழ்வார் அபேக்ஷிக்கிறார்.

3-ம் பாசுரம்.

செய்யேல் தீவினை யென்றருள் செய்யுமென்
கையார் சக்கரக் கண்ணபி ரானை
ஐயார் கண்ட மடைக்கிலு நின்கழ
லெய்யா தேத்த வருள்செய் யெனக்கே.

பொழிப்புரை:—உன் கையும் திருவாழியுமா யிருக்கிற அழகைக்காட்டி, மற்ற விஷயங்களில் இழுத்துப் போகும் இந்திரியங்களைத் தவிர்த்து உன் திருவடிகளிலேயே என்னை இழுத்து நிறுத்திக்கொண்டவனே, நான் கண்டம் அடைக்கின்ற மரணதசையிலும் உன் திருவடிகளிலே நான் இளையாதே யேத்தும்படி பிரானே, கிருபைசெய்தருளவேணும்.

குறிப்பு:—கழல் எய்யாதுஏத்த—எம்மனிதருக்கும் பிராணன் வெளிப்படும் மரணதசையில் தொண்டை பேசமாட்டால் கபத்தால் அடைத்துக்கொள்ளும். ஒருபேச்சுக்கூடப் பகர ஏலாதசமயத்தில் பகவானது திருவடிகளைப் பாட்டுப்பாடிப் புகழச் சாத்தியமாகாது. இங்கு ஆழ்வார் பிரார்த்திப்பது, இந்த இக்கட்டான சமயத்திலும் தாம், திருவாய்மலர்ந்து அவனைத்துதிக்க வல்லவராகும்படி வரம் வேண்டுகின்றார். வாசிகமான கைங்கரியத்துக்கும் இடையூறு வரவொண்ணாது என்கிறார்.

4-ம் பாசுரம்.

எனக்கே யாட்செய் யெக்காலத்து மென்றன்
மனக்கே வந்திடை வீடின்றி மன்னித்
தனக்கே யாகவெனைக் கொள்ளு மீதே
யெனக்கே கண்ணனை யான்கொள் சிறப்பே.

"தம்மை யடிமைசெய்வித்துக்கொள்ளும் படியை யெம்பெருமான் கற்பிக்கிறார். ஸர்வ காலமும் எனக்கே அடிமை செய்யென்று திருவாயாலே யருளிச்செய்து ஒரு க்ஷணம் மாத்திரமும் ஒழியாமே என்னெஞ்சிலே புகுந்தருளித் தாம் சாத்தியருளும், சாந்து சந்தனம் திருமாலை திருப் பரிவட்டங்கள் போலே என்னைத் தனக்கே சேஷமாக (உரித்தோனாக) கொள்ளுமிதுவே எனக்கே கண்ணனை யான்கொள் சிறப்பென்கிறார்" ஆராயிரப்படி.

குறிப்பு:—"தனக்கே யாக" பிறர்க்குமன்றியே எனக்கே கூடவுமன்றியே தனக்குச் சேஷமாக ஸ்வீகரிக்கை. அதாவது ஸ்வார்த்த பிரயோஜனமாக எடுத்து உதவிக்கொள்கை - சந்தனம் திருமாலை முதலிய உதாஹரணங்கள் ஸ்வப்பிரயோஜனம் ஒன்றையே குறிக்கும்.

5-ம் பாசுரம்.

சிறப்பில் வீடு சுவர்க்க நரக
மிறப்பி லெய்துக வெய்தற்க யானும்
பிறப்பில் பல்பிற விப்பெரு மானை
மறப்பொன் றின்றி யென்று மகிழ்வனே.

இறப்பில் - மரணகாலத்தில், சிறப்பில் வீடு - சிறப்பான மோக்ஷமென்ன, சுவர்க்கம் நரகம்-சுவர்க்கமென்ன நரகமென்ன இவைகளில் ஒன்றை, எய்துக-அடையட்டும், எய்தற்க-அடையாமல் போகட்டும், யானும்-தேகமோ ஆத்மாவோ அல்லது அஹம் சப்தத்திற்கு நித்தியவஸித்த குணகனான ஆத்மாதானே ஆகட்டும், என்று தற்காலம் உதாஸீன புத்தியுள்ளவனாக இருக்கிற நான் எவ்விதமாய்த் தீர்ந்தாலும் அதன் தத்துவத்தில் எதிர்பார்க்கும் ஆவல் எனக்கொன்றும் இல்லை. மேல்கண்ட இரண்டு அடிகளுக்கும், "தேகமே ஆத்மாவாகலாம், தேஹாதிரிக்தமாய் நித்தியவஸித்தஞான குணமான அஹமர்த்தமே ஆத்மாவாகலாம். அதில் ஓர் ஆதாரமுமில்லை." என்று ஆராயிரப்படியின் உரை.

பின்னடி இரண்டுக்கும் ஷை ஆராயிரப்படி "கர்ம நிபந்தனமான ஜந்மரஹிதனாய் வைத்து ஆச்ரிதபரித்திராணார்த்தமாகத் தேவமனுஷ்யாதி ரூபங்களுடன் வந்து பிறந்தருளும் ஸ்பாவனாயிருந்த எம்பெருமானுடைய ஸர்வ திவ்யாவதாரங்களையும் ஸர்வ திவ்விய சேஷ்டிதங்களையும் ஸர்வ கல்யாணகுணங்களையும் மறவாதே என்றும் அநுபவிக்கப் பெறவேண்டுமென்கிறார்"

குறிப்பு:–1 "மகிழ்வனே" என்பதால் இராமகிருஷ்ணாதி அவதாரங்களின் வடிவழகும் திவ்விய சேஷ்டிதங்களும் இவர்க்கு இலக்கு என்று தோன்றுகிறபடியால் உரைகாரர் இந்த விவரங்களையுங் கூட்டி உரையிட்டிருக்கின்றார்.

2. இப்பாசுரத்தின் ஸந்தர்ப்பத்தில் யாம் உணர்தற்பாலது ஒன்றுண்டு. அதாவது, நம்மாழ்வாரோ மஹாயோகி. நிஷ்டையிலும் தவறாது யோகுபுரிந்துகொண்டிருப்பவர். தத்துவங்களிலும் இவரைப்போன்று தெளிந்தவரும் யாருமில்லை. கம்பர் சடகோபரந்தாதியில்

சித்தர்க்கும் வேத சிரந்தெரிந் தோர்கட்கும்
செய்தவர்க்கும்
சுத்தர்க்கும் மற்றைத் துறைதுறந் தோர்க்கும்
தொண்டுசெய்யும்
பக்தர்க்கு ஞான பகவர்க்கு மேயன்றிப்
பண்டுசென்ற
முக்தர்க்கு மின்னமு தம்சட கோபன்-
மொழித்தொகையே.

என்று, சித்தர், சுத்தர் பக்தர் ஞானபகவர் தபஸ்வி இவர்களுக்கும் மாத்திரமன்றிப் பண்டு சென்ற முக்தர்களுக்கும் (வைகுண்ட வாசிகளுக்கும்) வேதச்சிரந் தெரிந்தோர்க்கும் (அதாவது வேதத்தின் தலையாகிய உபநிஷத்திலுள்ள வேதாந்தத்தின் துணிவுகளை நன்றாகத் தெரிந்தவர்களுக்கும்) இவ்வாழ்வார் பாடிய பாயிரங்கள் அமுதமென்று கூறியதற்குக் காரணம், வேதத்தைக் காட்டிலும் இவர் நூல் தத்துவங்களைத் தெளிவாக விளங்குவது பற்றியல்லவோ? பிருகிருதத்திலும் முன் நான்கு தசகங்களில் பகவானது கலவி நடந்துவந்திருக்க இத்தசகத்தில் "எம்மா வீட்டுத்திறமும் செப்பம்" என்று ஆரம்பித்து, இப்பாசுரத்தில் "தேஹமே ஆத்மாவாகட்டும் - யானும் தேஹம் முடியும்போது எக்கதிக்குச் சென்றாலும் செல்வேனாக" என்று திருவுள்ளத்தில் மாசுபடியப் பேசியதன்றியும் மற்றும் தம் தத்துவ உணர்ச்சியில் தளர்ச்சியும், அதிலும் நலம் அந்தமில்லாத நாடு புகுவாரான இவருக்குப் பரிசுத்தாத்ய ஸ்வரூபத்தில் நிராதரவும் உண்டாகி மனதின் நடுநிலைமை கெட என்ன காரணம்?

இத்தெசையில் ஆழ்வாருக்குப் பகவானிடத்தில் இடையீடின்றி எப்பொழுதுங் கைங்கரியஉத்தேசியம் சம்பவித்திருக்கிறது யாமறிந்த விஷயமே. முன் நான்கு பாசுரத்தினுரையில் இதை ஒருவாறு சொல்லியிருக்கின்றோம். இது இவ்வண்ணமாயினும் இக்காரணமொன்றே இம்மஹானை இழுத்துத் துயர்படுத்தக் கூடுமோ? இந்தச் சந்தர்ப்பத்தில், பொய்யில்லாப்புலவர் "தனக்குவமை யில்லாதான் தாளடி சேர்ந்தார்க்கல்லது மனக்கவலை மாற்றலரிது' என்று அறிதியிட்டிருப்பது எம் ஞாபகத்துக்கு வருகிறது. அவன் தாளடி சேர்வதற்குப் பிரதிபந்தகமான ஐம்புலன்களின் பற்றறுத்தவர் நம்மாழ்வார். இம்மஹான் "தாளடிசேர்ந்தவர்" என்றுகூற என்னதட்டுண்டு? அவருக்கு மாற்றவல்லதல்லாத மனக்கவலை எப்படி ஸம்பாவிதமாகும். தேஹம் முடியும்வரையும் ஒருவருக்கும் மனக்கவலை மாற்றலரிது என்று திருக்குறளிற்கு அர்த்தம் கொள்வது உசிதமாகுமோ? ஆகாது; பொருத்தமுமன்று. இக்குறளுக்கு இலக்காவார் இவ்வாழ்வார் போன்றவர் 'சிறுவிரல்வைத்து எண்ணக்கூடிய' சிற்சில மஹான்களே-அங்ஙனம் உள்ளவரைக் கண்டெடுப்பது அரிது. இப்படி நீதியும் நியாயமு முளவாயிருக்க, ஆழ்வாரின் மனத்திட்பத்துக்கு நெகிழ்ச்சி நேர்வதற்கு மிகநுட்பமான காரணம் ஒன்றிருத்தல்வேண்டும். அது யாதென்று விசாரிக்குமளவில் இரண்டு இயக்கங்கள் புத்திக்கு வருவதை ஒருவாறு எடுத்துரைப்போம். ஒன்றாவது, ஆழ்வாருக்கு வைகுண்டம், தனக்குவமை யில்லாதான் தாளடி நிச்சிதமே கரஸ்தபிராயம். ஆனாலும், கைக்கு எட்டினது வாய்க்கு எட்டும்வரையும் ஒரு அந்தராயம் (நடுவில் தட்டுமுட்டு-காலவிளம்பம்) உண்டென்று ஜகத் வியாபாரத்தில் நாம் கண்டுள்ளோம். இந்த நடுமுட்டு ஆழ்வாருக்கு வெகுதுஸ்ஸஹமாய் நின்று அம்மஹானை நலிவுசெய்து வருத்துகின்றது என்று நாம் கொள்வது உசிதம். வைகுண்டத்திலும் இவரது உத்தேசியம் தொண்டுபுரிவதே யல்லவோ? அந்தத் தாவலியத்தொண்டு நேர்நின்று ஸம்பாவிதமாகததின் நிமித்தமல்லவோ இவர்நோவுக்குக்காரணம். இப்பாசுரத்திற்கு முன்னும் தேஹ அவஸான ஸமயத்தில் தொண்டைகபத்தால் அடைத்துப்போக அதுநிவர்த்தமாகித் தாம் பெருமானுக்குத் துதிகள்பாடி மகிழவேண்டுமென்றல்லவோ இவர் அபேக்ஷிதம். இரண்டாவது - சாதாரண உலகத்தோர்போல் உணர்ச்சிநெகிழ்ந்து "கேடுகெட்ட மானிடம்" இவர் அல்லரேனும் மானிடஜாதிக்குள்ள ஐயம் திரிபு வழுக்கள் ஏற்படுவது அஸஹஜமல்ல. "மானிடம்" என்கிறபதத்திற்கு "மன்" தாது. இதற்கு 'நினைத்தல்' என்றுபொருள். நினைப்பில்நினைவின்முழு உணர்ச்சி மாத்திரம் விளையவேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லை. ஆசையுள்ள மாக்களுக்குப் பகலிலுங்கூடக் "கனவு" ஏற்படுமென்பதை எல்லாரும் ஒருவாறு அறிந்திருப்பார்கள். ஆழ்வார், இம்மாதிரி நனவிலும் வேட்கையின் மிகுதியால் "கவலைக்கு" ஆள் ஆனாரோ என்பது எம்முடைய இரண்டாவது ஊஹம்.

இவ்வியக்கங்களை யாதொரு சுமதலையுமின்றி, மனத்திட்பத்திலும் ஊஹித்தறியும் நுட்பத்திலும் இதுவோ அதுவோ வென்ற இடர்பாடும் இழுக்கு முள்ள இடத்து ஊக்கத்துடன் உள்பிரவேசித்து முதிர்ந்த அறிவாலும் கல்வி கேள்வி தேர்ச்சி முதலிய சாதனங்களாலும் கலக்கங்களை வேரோடறுத்து நறுந்தமிழின் கைப்பழக்கத்தால் எத்துணையும் உள்ளதை ஸாதிக்கவல்ல இக் "கலாநிலயத்தின்" "தலைபங்கம்" "கம்பராமாயணம்" முதலிய கட்டுரைகள் எழுதும் பண்டிதர்களுக்கு விட்டுவிட்டு யான் விலக்கிகொள்ளலாமென்று இவ்வியாஸத்தின் நடுவில் உத்தேசித்தேன். ஆனாலும் எம் ஆழ்வாரையா? ஈவு இரக்கமில்லாமல் குற்றமுள்ளவிடத்து உண்மையை இடித்துரைத்துத் தசரதர் ஆனாலும், இலக்குமணன் ஆனாலும் வால்மீகியானாலும் பேரினால் பெருமைப்படுத்தாமல் வஸ்து சுபாவத்தில் குற்றம் சாட்டும் "கலாநிலயத்தின்" கண் காட்டிக்கொடுக்க இசையாதவனாய் யான் அன்பர் கூட்டமாகிய நியாயஸ்தலத்தில் விசாரித்து ஆழ்வார் பக்கல் தவறுதல் இல்லை என்று அறுதியிடுகின்றேன்.

அப்பர்

அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—29. தருக்கம்

[327-வது பக்கத் தொடர்ச்சி]

(vi) பதமும் லட்சணா விருத்தியும்.

அந்வய வுணர்ச்சியேனும் தாற்பரிய வுணர்ச்சியேனும் யாண்டு வாக்கியத்திற் பொருந்தவில்லையோ, ஆண்டு லட்சணாவிருத்தி கொள்ளப்படுகின்றது. தாற்பரிய உணர்ச்சி பொருந்தாமையே லட்சணைக்கு முக்கிய காரணமாகும். லட்சணா விருத்தியாவது பதப்பொருளின் சம்பந்தமென முன்னரே கண்டோம். இனி, இலக்கணைகள் எத்துணை, அவை யாவை என்பதை ஆராயப்புகுவோம்:—

(1) விட்ட இலக்கணை:

வாச்சியார்த்தத்திற்கு அன்வய மல்லாவிடத்து *, விட்ட இலக்கணை கொள்ளப்படுகின்றது. "கங்கையிடைச்சேரி" என்னுமிடத்துக் கங்கையென்னும்பதம் கங்கையென்னும் அந் நதிப்பெருக்கு நீரோட்டத்தலத்தைக் குறிக்காமல், அச் சக்தியார்த்த சம்பந்தமுடைய கங்கைக்கரையை யுணர்த்துகின்றமையின், அதற்கு விட்டஇலக்கணை யுளது என்பர். † விட்ட இலக்கணைக்குப் பல உதாரணங்கள் சம்பந்தர் தேவார பாசுரங்களிற் காணலாம்:—

பன்னி னார்மறை பாடினார்
பாயசீர்ப் பழங் காவிரித்
துன்னு தண்டுறை முன்னினார்
தூநெறி பெறு வாரெனச்
சென்னி திங்களைப் பொங்கராக்
கங்கை யோடுடன் சேர்த்தினார்
மின்னு பொன்புரி நூலினார்
மேயது விள நகரதே.

திருஞானசம்பந்தர்.

எட்டு நாண்மலர் கொண்டவன் சேவடி
மட்ட லரிடு வார்வினை மாயுமால்
கட்டித் தேன்கலந் தன்ன கெடிலவீ
ரட்ட னாரடி சேருமவ ருக்கே.

திருவதிகை வீரட்டம் - திருக்குறுந்தொகை 1.

[N. B.-கெடிலவீரட்டம்-கெடிலக்கரைவீரட்டம்]

(2) விடாத விலக்கணை.

வாச்சியார்த்தத்திற்கும் அன்வயம் உள்ளவிடத்து விடாத விலக்கணை கொள்ளப்படுகின்றது. சிவப்பன், கறுப்பன் என்னும் காரணப்பெயர்களில், சிவப்பு கறுப்பு என்னும் குணம் அவர்களை விட்டு நீங்காதனவாதலின், இது விடாத விலக்கணை யெனப்படும்.

உறவு பேய்க்கண முண்பது வெண்டலை
யுறைவ தீம முடலிலோர் பெண்கொடி
துறைக ளார்கடற் றோணி புரத்துறை
யிறைவ னார்க்கிவ னென்கண் டன்பாவதே.

திருத்தோணிபுரம் - திருக்குறுந்தொகை 8.

(3) விட்டு விடாத விலக்கணை.

"வாச்சியார்த்தத்தின் ஏகதேசத்தை விட்டு ஏகதேசத்திற்கு (ஒரு பகுதிக்கு) அன்வயமுள்ள விடத்து விட்டுவிடாத இலக்கணை கொள்ளப்படுகின்றது" ஒருவன் தான் முன்னரேகண்ட ஒரு பொருளை வேறு இடத்திற் கண்டு 'அதுதான் இது' என்னுமிடத்து, சென்ற காலத்திலும் வேறிடத்திலுமுள்ள பொருள் அது வென்னும் பதத்திலுள்ள பொருளும், நிகழ் காலத்தில் சமீபதேசத்திலுள்ள பொருள் இதுவென்னும் பதத்தின் பொருளுமாம். ஆதலினால், 'அது தானிது' என்னும் வாசக சமுதாயத்தின் பொருள் சென்ற காலத்துடனும் வேறிடத்துடனும் கூடிய பொருளே நிகழ்காலத்துடனுஞ் சமீபதேசத்துடனும் கூடியிருக்கின்றதென்பதாம். ஈண்டு, சென்ற காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும், அன்னிய தேசத்திற்கும் சமீபதேசத்திற்கும் விரோதம் இருக்கின்றமையின், அது இது என்னும் இரண்டு பதங்களின் பொருளாகிய (வாச்சியமாகிய) தேசகாலங்களைவிட்டு, பிண்ட மாத்திரத்தில் இரண்டு பதங்களுக்கும் விட்டுவிடாத இலக்கணையுளதென்பர். தத்துவமஸி யென்னும் மகாவாக்கியப்பொருள் கூறுங்கால இவ்விலக்கணையைப் பயன்படுத்துவார்.

"காலதிசை தேச வர்த்தமான மாதி
கலந்து நின்ற வருள் வாழி"

என்னும் தாயுமானார் பாசுரங் காண்க. மற்றும் திருநாவுக்கரசும்,

விரித்தானை நான்மறையோ டங்கமாறும்
வெற்பெடுத்த விராவணனை விரலா லூன்றி.
நெரித்தானை நின்மலனை யம்மான் றன்னை
நிலாநிலவு செஞ்சடைமே னிறைநீர்க் கங்கை
தரித்தானைச் சங்கரனைச் சம்பு தன்னைத்
தரியலர்கள் புரமூன்றுந் தழல்வாய் வேவச்
சிரித்தானைத் திகழொளியைத் திருமாற் பேற்றெஞ்
செம்பவளக் குன்றினைச்சென் றடைந்தே னானே

திருமாற்பேறு - திருத்தாண்டகம் 10.

இங்கு விட்டபாகம் தேசமும் காலமும், மற்றபாகம் பிண்டம்; எனவே செம்பவளக்குன்றாம் சிவம் நிகழ்காலத்தில் திருமாற்பேற்றில் திகழ்கின்றது, என்றவாறு கொள்க. இறந்தகாலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் பொதுவாய் நின்று தேசபேதத்தால் மாறுபடாதது * பிண்டமெனப்படும். பிறவிதோறும் நின்று இயங்கும் நமது சரீரம் பிண்டமாம்.

பிண்டத்தைக் கழிக்க வேண்டிற்
பிராணையே பிதற்று மின்கள்
அண்டத்தைக் கழிய நீண்ட
வடலரக் கன்ற னுண்மை

---

* வாச்சியார்த்தம் - சொற்பொருள்

அன்வயமில்லாவிடத்து - கொண்டு கூட்டுதெ லில்லாவிடத்து என்னும் பொருளாம்—தர்க்கபாஷை வடமொழிச் சொற்றொடர்களால் கையாளப்படுவதால், யானும் அவ்வாறே எழுதலாயினேன். எனினும், தென்மொழி மறுபதங்கள் ஆங்காங்குக் காட்டப்பட்டிருக்கின்றன.

† இம்மூவகை இலக்கணைகளைச் சிவஞான போதத்தில் மிட்பநுட்பஞ் சிறக்கச் செப்பியிருப்பதைக் காணலாம்.

'கண்டொத்துக் கால் விரலால்
ஊன்றிமீண் டருளிச் செய்த
துண்டத்துத் துருத்தி யானைத்
தொண்டனேன் கண்ட வாறே''
திருத்துருத்தி - திருநேரிசை 10.

இப் பிண்டமும் விட்டுவிடாத இலக்கணை எப்போதும் பெற்று விளங்கும்.

(vii) இலக்கணைகளின் பொதுவகை.

முன்கூறிய இலக்கணைகள் மூன்றும் இரண்டு வகைப் பிரிவுகளி லடங்கும். அவையாவன—பிரயோஜனவதி லக்ஷணை, நிரூட லட்சணை என்பன. பிரயோஜனவதி யாவது பயனுடையது. நிரூடமென்பது இடுகுறி.

சக்தியுடைய பதத்தினைவிட்டு இலாக்ஷணிக சொற்பிரயோகத்தில் எதுபிரயோசனமுண்டாக்குகின்றதோ அது பிரயோஜனவதிலக்ஷணை. கங்கையிலிடைச்சேரி என்றுகூறின் கங்கையென்னும் பதத்திற்குக்கரையிற் பிரயோஜனவதி லக்ஷணை யிருக்கின்றது. கரையிலிடைச்சேரி என்றுகூறின் கரையில் குளிர்ச்சி தூய்மை முதலியவற்றின் ஞானமுண்டாவதில்லை. கங்கையென்னும் பதத்தாற் கரையை அறிவிப்பதாயின் கங்கையின் தர்மமாகிய குளிர்ச்சி, புனிதத்தன்மை முதலியன கரையிற் காணப்படுதலின் பிரயோஜனவதி லக்ஷணையுளதென்க.

கங்கைக்குச் சமமாக எண்ணக்கூடிய பல திவ்யநதிகள் நமது தமிழ்நாட்டி லிருப்பதால் இவ்வகை யிலக்கணையை அப்பர் பற்பல நதிகளின் கரைகளிலுள்ள தலங்களைப் பாடும்போது குறிப்பிடுவது காண்க:—

இரங்கா வன்மனத் தார்க ளியங்குமுப்
புரங்கா வல்லழி யப்பொடி யாக்கினன்
தரங்கா டுந்தட நீர்ப்பொன்னித் தென்கரைக்
குரங்கா டுதுறைக் கோலக்க வாலியே.
திருக்குரங்காடுதுறை - திருக்குறுந்தொகை 1.

அரக்க னாற்ற லழித்தவன் பாடல்கேட்
டிரக்க மாகி யருள்புரி யீசனைத்
திரைக்கொ ணீர்க்கடு வாய்க்கரைத்தென்புத்தூர்
இருக்கு நாதனைக் காணப்பெற் றுய்ந்தெனே.
திருக்கடுவாய்க்கரைத்திருப்புத்தூர்-திருக்குறுந்தொகை.

ஈண்டு, குளிர்ச்சி புனிதத்தன்மை முதலியன சொல்லுணர்ச்சிக்கு விஷயமல்ல. ஆனால் அநுமிதிக்கு விடயமாம். பொன்னிக்கரை, குளிர்ச்சி புனிதத்தன்மை முதலியவற்றை யுடையதாதல் பொன்னி, நீர்க்கடுவாய் என்னும் சொற்களா லறிவிக்கப்படுகின்றது.

பிரயோஜன சூன்ய லக்ஷணையாகிய நிரூடலட்சணை பதத்தில் சக்தி விருத்தியில்லாத காலத்து, சக்தி விருத்தியால் அறியப்படுகின்ற பொருளை (சக்கியத்தைப்) போல, எப்பொருளுணர்ச்சி எப்பதத்தால் எல்லோருக்கும் பிரசித்தமாயுண்டாகின்றதோ, அப்பொருளில் அப்பதத்திற்குப் பிரயோஜன சூன்யலக்ஷணை யென்னும் நிரூடலக்ஷணை யிருக்கின்றதென்பர். (உ-ம்) நீலம் சூடினாள் என்னும் வாக்கியத்தில் நீலமென்னும் பதத்தின் குணியுணர்ச்சி உண்டாகுங்காலை, குணியில் பிரயோஜன சூன்யலட்சணை யிருத்தலினால், அது சக்தி விருத்திக்குச் சமமாய் நிரூடலக்ஷணையாய் விளங்கும்.

நீலநன் மேனிசெங்கண் வளைவெள்ளெயிற்ற
ணரிகேச னேடிவருநாட்
காலநன் மாலைகொண்டு வழிபாடுசெய்யு
மளவின்கண் வந்து குறுகிப்
பாலனை யோடவோட பயமெய்துவித்த
வுயிர்வவ்வுபாசம் விடுமக்
காலனை வீடுசெய்த கழல்போலு மண்டர்
தொழுதோது சூடுகழலே.
தசபுராணம் - பண் - பழம்பஞ்சுரம் 6.

கருவரை யனைய மேனிக்
கடல்வண்ண னவனுங் காணன்
திருவரை யனைய பூமேற்
றிசைமுக னவனுங் காணன்
ஒருவரை யுச்சி யேறி
யோங்கினு ரோங்கி வந்து
அருமையி லெளிமை யானார்
அவர்வலம் புரவ னாரே.
திருவலம்புரம் - திருநேரிசை 9.

(viii) லட்சணா விருத்தியின் அந்தர்க்கதம்.

இலட்சணா விருத்தியை, கௌணிவிருத்தி யென்றும் வியஞ்சனா விருத்தியென்றும் இரண்டுவகையில் தர்க்கநூல் விளக்கும். அவற்றுள் கௌணிவிருத்தியாவது, சக்கிய அர்த்தத்தில் எந்தக்குணம் இருக்கின்றதோ அதனையுடைய அசக்கியார்த்தபதத்தில் சொல்லப்படுவதாம். அதாவது - வீரமுடையோனைநோக்கி, இவன் சிங்கம் என்னுமிடத்துச் சிங்கத்தின் சக்கியமான சூரத்தன்மை சிங்கபதத்திற்கு சக்கியமாகாத மனிதனை அதனை யுடையோனென்னல்:—

எழிலாரிராச சிங்கத்தை
யிராமேச்சரத்தே மெழிலேற்றைக்
குழலார்கோதை வரைமார்பிற்
குற்றாலத்தெங் கூத்தனை
நிழலார்சோலை நெடுங்களத்து
நிலாயநித்த மணாளனை
யழலார்வண்ணத் தம்மானை
யன்பிலணைத்து வைத்தேனே.
பாவநாசத் திருப்பதிகம் - பண் - பழம்பஞ்சுரம் 7.

அங்கமே பூண்டா யனலா டினா
யாதிரையா யானிழலா யானே றூர்ந்தாய்
பங்கமொன் றில்லாத படர்ச டையினாய்
பாம்பொடு திங்கள் பகைதீர்த் தாண்டாய்
சங்கையொன் றின்றியே தேவர் வேண்டச்
சமுத்திரத்தி னஞ்சுண்டு சாவா மூவாச்
சிங்கமே உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.
திருப்புகலூர் - திருத்தாண்டகம் 2.

கௌணி விருத்தியென்பது லக்ஷிதத்தின் லக்ஷணை. சிவபெருமான் சிங்கமென்புழிச் சிங்கத்தோடு அபின்னன் சிவனென்னும் வாக்கியார்த்தம், பதங்களின் சக்திவிருத்தியால் உண்டாயினும், அது பொருந்தாது. ஒருவகை யாகாரத்தோடும், தாடி மீசை முதலியவற்றோடும் கூடிய மிருக விசேடமாகிய சிங்கமென்னும் பசுத்தன்மை, பசுபதிக்குப் பொருந்தாதாதலின். சிங்கமென்னும் சொல்லுக்குரிய மிக்க வீரம் பெருந்தன்மை முதலிய தர்மங்களை யுடையோன் சிவபெருமான், அவை அவ னிலக்கணையென்பர். சிங்கபத வாச்சியார்த்தத்தின் பாரம்பரைச் சம்பந்தமுள்ளதால் இது இலக்ஷித லக்ஷணையுமாம்.

வியஞ்சனா விருத்தியாவது, ஒருவாக்கியத்தின் வியங்கிய (அதாவது குறிப்புப்) பொருளை யுணர்தலாம். சத்துரு வீட்டில் போஜனம் செய்ய எத்தனித்தவனை நோக்கி, "விஷத்தைப் புசி" யென்பது போசனத்தின் அபாவத்தில் ஆகும். சிவபெருமானைப் "பேசாத நாளெல்லாம் பிறவா நாள்'' என்பதும் அவ்வாறே:—

கற்றானைக் கங்கைவார் சடையான் றன்னைக்
காவிரிசூழ் வலஞ்சுழியுங் கருதி னானை
யற்றானை யலர்ந்தார்க்கு மருள்செய் வானை
யாரொரும் புகுவானை யறிந்தோ மன்றே!
மற்றாரும் தன்னொப்பா ரில்லா தானை [தும்
வானவர்க ளெப்பொழுதும் வணங்கியேத்
பெற்றானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.
கோயிற் பெரியதிருத்தாண்டகம் 2.

இவ்விலக்கணை "கூற்றாயினவாறு'' என்னும் திருப்பதிகத்தின் 9-வது பாசுரத்தில் காணலாம்.

பொன்போல மிளிர்வதொர் மேனியினீர்
புரிபுன் சடையீர் மெலியும்பிறையீர்
துன்பே கவலைப் பிணியென் றிவற்றை
நணுகாம றுரந்து கரந்துமிடீர்
என்போலிக ளும்மையினித் தெளியார்
அடியார்படு வ திதுவே யாகில்
அன்பே யமையும் மதிகைக் கெடில
வீரட்டானத் துறையம் மானே.
திருவதிகை வீரட்டானம் - பண், கொல்லி 9.

* பிண்டத்தைக் காக்கும் பிரமனார் போலும்
பிறவி யிறவி யிலாதார் போலும்
முண்டத்து முக்க ணுடையார் போலும்
முழுநீறு பூசிய முதல்வர் போலும்
கண்டத் திறையே கறுத்தார் போலும்
காளத்தி காரோண மேயார் போலும்
அண்டத்துக் கப்புறமாய் நின்றார் போலும்
அணியாரூர் திருமூலட் டான னாரே.
திருவாரூர் - திருத்தாண்டகம் 9.

ஜூலியஸ் ஸீஸர்

[ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

[335-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 3. களம் 1.

ப்ரூட்டஸ்:—இருங்கள்...யாரிங்கு வருவது ?

[ஓர் வேலையாள் வருகின்றான்]

ஆண்டனியின் நண்பனொருவன்.

வேலையாள்:—இவ்வண்ணம் யான் முழங்காற்படியிடும்படி ப்ரூட்டஸே, என் தலைவன் கட்டளையிட்டனன். இவ்வண்ணம் யான் விழுந்து தொழும்படி மார்க் ஆண்டனி எனக்குக் கட்டளையிட்டனன். இவ்வண்ணம் யான் நெடிதுகிடந்து, இவ்வண்ணம் உரைசெய்யக் கட்டளையிட்டனன் (1):—"பெருந்தகையும் அறிவும் திறனுந் தருமநியதியும் உடையவன் ப்ரூட்டஸ்: ஸீஸர், ஆற்றலும் வீரமும் இராஜரீகமும் அருளும் உடையனாயிருந்தனன். ப்ரூட்டஸைக் காதலித்தேனென்றும், மாண்புற மதிக்கின்றேனென்றுஞ் சொல்: ஸீஸரை, அஞ்சினேன், மாண்புற மதித்தேன், காதலித்தேன், என்று சொல். ஆண்டனி, தன்பால் இடரின்றி வந்து, செத்துக்கிடப்பதற்கு எங்ஙனம் ஸீஸர் ஏற்றவனாயினன் என்பதைத் தெளிந்துகொள்ளலாம் என ப்ரூட்டஸ் உறுதியளிப்பானாயின், இருந்து வாழ்கின்ற ப்ரூட்டஸைக் காதலிக்கும் அவ்வளவு இறந்தொழிந்த ஸீஸரை மார்க் ஆண்டனி காதலிப்பதின்றியே, வழிப்படா இவ்வரசியலின் விபத்துக்களினூடு, பெருந்தகைப் ப்ரூட்டஸின் விதியையும் காரியங்களையும் பொய்யாத நம்பிக்கையுடன் தொடர்ந்து நடப்பான். (2) இவ்வண்ணம் இயம்புகின்றான் என் தலைவன்.

ஸீஸரைக் கொன்றுவீழ்த்தியபின் "விடுதலை சுதந்தரம் அமைதி'' என்றென்று முழங்கினர்களாய் இச்சதியாளர் கடைத்தெரு மருங்குசென்று தம் செய்கையின் தகுதியைத் தெரிவிப்பதற்குப் புறப்படுந்தறுவாயில், மார்க் ஆண்டனியால் அனுப்பப்பட்ட ஏவலாளன் வந்து சேர்கின்றான்.

(1) வந்த அவ்வேலையாள் புரூட்டஸின் முன் வணங்கிப் பின் தரையில் வீழ்ந்து ஆண்டனி சொல்லியனுப்பிய செய்தியைத் தெரிவிக்கின்றான். தொழுவதும் தரையில் வீழ்வதும் பின் விளம்பும் செய்தியும் ஆண்டனியின் கட்டளைப்படி நிகழ்கின்றன என்பதை முதலில் ப்ரூட்டஸிற்குத் தெரியச் சாற்றிப் பிறகு தன் தூதுமொழிகளை இவன் துவக்குகின்றனன். இனி வருவன, ஆண்டனியின் நேர்மொழிகளாகவே (direct speech) கூறப்படுகின்றன.

ஸீஸரைக் கொன்றவர்கள், அவன்பால் வைத்த நட்பின் தொடர்புபற்றித் தன்னையும் கொல்வதற்கே கருதியிருப்பார் என ஆண்டனி பயந்தனன். எனின், தன்னையுங் காத்துக்கொண்டு ஸீஸரின் பழியையும் வாங்குவதற்கு வழி தேடுகின்ற ஆண்டனி, முதலில் ப்ரூட்டஸ் முதலியவர்களது மனதைத் தெரிந்துகொண்டு வருவதுடன் அவரிடத்தில் தான் உறவு வேண்டுவான்போல் நிற்பதையும் தெரிவித்து வரும்படி ஓர் தூதனை அனுப்புகின்றான். ப்ரூட்டஸிற்கு அஞ்சித் தான் பணிவது போலேனும் அல்லது அவனை வெறுத்து விஞ்சுவது போலேனுந் தோன்றாமல், நியாயம் அவர்பக்கல் இருக்குமாயின் தன்னுடைய நட்பையுந் தருவதற்கு இசைந்து நின்றானென்னத் தெரிவிக்குமச் சொற்கள் மிகவுந் திறமை வாய்ந்தன.

(2) "எனக்கொன்றும் தீங்கு செய்வதில்லை என்று வாக்குறுதி யளிப்பாயாயின் நான் உன்னிடம் வருகின்றேன். அப்பொழுது எனக்கு, ஸீஸரைக் கொன்று வீழ்த்தியதற்கு ஏற்ற காரணத்தை எடுத்துச்சொல். அது தக்கதாயின், இறந்தொழிந்த ஸீஸரை நினைத்திருப்பதைக் காட்டிலும் இருக்கின்ற உன்னுடன் சேர்ந்துகொண்டு நீதுவக்கிய இக்காரியத்தை முடிப்பதற்கு உதவிசெய்வேன்''—என்பது இவ்வாக்கியங்களின் பொருள்.

ப்ரூட்ட்ஸ்:—அறிவும் ஆற்றலுஞ் சான்றவோர் உரோமன் உன் தலைவன். அவனைக்குறையுற என்றம்யான் மதித்ததில்லை. இவ்வயின் வருதற்கிசைவானாயின், சங்கையற அறிந்து அமைதி காண்குவானென்று சொல்; என் தகவின்மீ தாணை, தீண்டப்படாமல் திரும்புபவனு மாவான். (3)

வேலையாள் :—இதோ அழைத்து வருகின்றேன்.

[போகின்றான்]

ப்ரூட்டஸ்:—நட்பிற்கு நாமவனை நனி யெய்துவோமென்று யா னறிவேன். (4)

காஸ்ஸியஸ் :—எய்தினு லாகாதோ என விழைகின்றேன்: எனினும் அவனை அதிகமும் அஞ்சுகின்ற மனமொன்று யானுடையேன். யான் அயிர்ப்பதெல்லாம் எப்பொழுதும் அப்படியே முடிகின்றது (5).

ப்ரூட்டஸ் :—மற்று, இதோ ஆண்டனி வருகின்றான்.

[ஆண்டனி வருகின்றான்]

வருக, மார்க் ஆண்டனி.

ஆண்டனி :—ஐயகோ, ஆற்றல் சால் ஸீஸரே, இத்துணைத் தாழ்ந்து நீ கிடக்கின்றாயோ? உன்வெற்றியும் வைபவங்களும், உன் வாளால் பெற்ற வளங்களும் எல்லாம் இச்சிறு அளவிற்கோ சுருங்கிவிட்டன :—விடைகொள்கின்றேன்—(6) பெருமக்காள், யாது நீர் கருதுகின்றீரென்ப தறியேன். இன்னும் இரத்தம் வடிக்க வேண்டியவர் யார்; யார் வேண்டாது செழித்திருக்கின்றார். (7) அது யானேயாயின், ஸீஸரின் மரணவேளையிலும் தகுதிமிக்க வேளை வெறொன்றில்லை; உலகடங்கலும் பெருமையிற் சிறந்த இரத்தத்தால் செல்வம்செய்த உங்கள் வாள்களில் அரையளவு தகுதிவாய்ந்த கருவியும் வேறில்லை. என்பால் வஞ்சின முடையீராயின், உங்கள் செங்கரங்கள் பொங்கிப்புகையுமிப்பொழுதே உங்கள் கருத்தை நிறைவேற்றிக் கொள்ளுமாறு வேண்டுகின்றேன். ஆயிரம் ஆண்டுகள் என் ஆயுள் வளரினும், சாதற்கு இப்படித் தக்கதோர் தருணம் யான் காணமாட்டேன். வெறெவ்விடமும் என்விருப்பத்திற்கிப்படி இசைந்ததாகாது. இங்ஙனே, ஸீஸருக்கயலில், இக்காலத்தின் ஆய்ந்தெடுத்த தனித்தலைவர்களா முங்களால் வெட்டுண்பதல்லால் விளிவதற்குத் தகுதியுற்றவழியும் வேறில்லை. (8)

ப்ரூட்டஸ்:—ஓ, ஆண்டனி! உன் மரணத்தை எம்பால் நீ இரக்க வேண்டா. (9) எம் கைகளையும் இந்த எம் காரியத்தையும் காண்கின்ற உனக்கு யாம் இரத்தவெறிகொண்ட வன்கணாளராய்த் தோன்றத்தான் வேண்டுமெனினும் - எங்கள் கைகளையும் அவை செய்த இவ் விரத்தம்பெருகும் காரியத்தையும் மட்டுமே நீ காண்கின்றாய்—எங்கள் இதயங்களை நீ காண்கின்றாயல்லை.- அவை இரக்கமுடையன (10) உரோமின் பொதுத் தீமைகளுக்குற்ற இரக்கமானது—தீச்சுடர் தீச்சுடரைத் துரத்துமாபோல் இரக்கமும் இரக்கத்தைத் துரத்திவிட—ஸீஸரின் மீது இச்செய்கையை இழைத்திருக்கின்றது. (11) உன் வரையிலோ, உனக்கு எஞ்சரிகைகள் ஈயத்தினியன்ற நுனிகளையுடையன (12). மார்க் ஆண்டனி, வன்மத்தின் வலிமையில்லா எம் கரங்களும் சகோதரப் பான்மை வாய்ந்த எம் இதயங்களும், பரிவுடைய அன்பு அனைத்துடனும், நலமுடைய நினைவினோடும், உபசரித்துன்னை ஏற்றுக்கொள்கின்றன. (13)

(3) அதனிற்கு ஒவ்வி ப்ரூட்டஸ் உரைத்த மொழிகள் இவை. தீண்டப்படாமல் - யாவராலும் எவ்வகைத் தீங்கும் நேராமல். சங்கையற அறிந்து அமைதிகாண்குவான் - நான் சொல்லுங் காரணங்களிலிருந்து, ஸீஸரை நாங்கள் கொன்றது தக்கதே என்பதை அவன் சந்தேகமின்றித் தெரிந்துகொள்வான்.

(4) ஆண்டனியையும் கொல்வதா இல்லையா என்று முன் ஏற்பட்ட வாதத்தில், கொல்வதே தக்கது என்று வற்புறுத்திய காஸ்ஸியஸ் முதலியவர்களுக்கு விரோதமாய் ப்ரூட்டஸ் அவனைக் கொல்லவேண்டாவென்று மறுத்துவிட்டான். இப்பொழுது அதனைக் குறித்துச் சொல்கின்ற வார்த்தைகள் இவை. "எப்படியும் ஆண்டனி நம்முடன் நட்புடைய துணைவனாவான் என்று யான் என் மதியின் ஊகத்தால் அறிந்திருந்ததாற்றான் அவனைக் கொல்லலாகாதென்று அப்பொழுது யான் உங்களை மறுத்துப் பேசினேன் காண்" என்று ஏமாக்கும் கருத்து இதனிற் காணலாம். எனினும் இவன் அப்பொழுது கூறிய காரணங்கள் வேறு.

(5) காஸ்ஸியஸிற்கு, அந் நட்பின் தூது நிச்சயமாகத் தோன்றவில்லை. பகையாளி குடியை உறவாடிக் கெடுக்கின்ற சூழ்ச்சியோ என்று அயிர்க்கின்றான். அயிர்த்து, தான் சந்தேகப்பட்டபடியே எல்லாம் முடிகின்றனவே என்றும் அஞ்சுகின்றான்—இதனிலும் காஸ்ஸியஸ் எண்ணியபடியே ஆயிற்று.

(6) இதுவரையிலும், ஸீஸரின் சவத்தைப்பார்த்து இரங்கிய மொழிகள். வாள் வளம் - போரில் வென்று கவர்ந்த பொருள்கள். சிறு அளவு - தரையிலே அவன் சவம் கிடந்த நீளம்.

(7) உங்கள் ஆசைப்பயிரிற்குக் களையாய் முளைத்திருப்பவர் என்று இன்னும் யாரைக் கருதி நீங்கள் கொல்ல இருக்கின்றீரோ யானறியேன்.

(8) என்னையுங் கொல்லவேண்டுமென்பது உங்கள் கருத்தாயின் அதனை இப்பொழுதே முடித்துவிடுங்கள். ஸீஸரைக் கொன்ற காலம் இடம் கருவி கரங்கள் முதலியவைகளே என்னைக் கொல்வதற்கும் நனிமிகத் தகுதிவாய்ந்தன. இந்தப் பாக்கியமே எனக்கு வேண்டும் என்கின்றான். —இப்படித் தூண்டினால், கொல்ல நினைத்திருந்தவர்கள் கைகளும் நெகிழும் என்பதை அறியவல்ல சூழ்ச்சி ஆண்டனிக்கு உண்டு.

(9) உன்னை நாங்கள் கொல்லவேண்டுமென்று கேட்காதே.

(10) நாங்கள் செய்துள இக்காரியம் கொடியதேனும், நாங்கள் கொடுமனப்பாவிகள் அல்லர். இரக்கமுடைய நெஞ்சினர்களே.

(11) ஸீஸரின் மீதும் எங்களுக்கு இரக்கம் இருந்தது, ஆனாலும், அவனது ஆட்சியால் வருந்திய இவ்வுரோமாபுரியின்பாலும் எமக்கு இரக்கம் விளைந்தது. ஆதலால், இந்தப் பரிவினால் அவ்வருத்தத்தைத் தீர்க்கும்பொருட்டு, இரக்கம் வைத்திருப்பினும் ஸீஸரை நாங்கள் கொல்லவேண்டியது இன்றியமையாததாயிற்று. உரோமர்கள்பால் விளைந்த இவ்விரக்கம், ஸீஸரின்பால் தனியாகவைத்திருந்த அவ்விரக்கத்தைத் துரத்திவிட்டது, என்று சாதிக்கின்றான் ப்ரூட்டஸ். தீச்சுடர் தீச்சுடரைத் துரத்துவதாகக் கூறுகின்ற இவ்வுபமானம், ப்ரூட்டஸின் மனதைப் போலவே, தெளிவின்றிக் கிடக்குமெயம் கருதற்குரியது.

(12) சரிகை - கைவாள். அது ஈயத்தின் இயன்றிருப்பதாவது, "உன்னைக் கொல்வதற்கு உபயோகப்படுத்தப்படமாட்டாது" என்னும் பொருளது.

(13) இவ்வண்ணம் தான் ஆண்டனியை அன்புடன் ஏற்றுக்கொள்ளுகின்றதை ப்ரூட்டஸ் தெரிவிக்கின்றான்.

தமிழ்ப் பாடம் 18.

நள வெண்பா—சுயம்வர காண்டம்

[333-வது பக்கத் தொடர்ச்சி]

தூதுவந்த காதலனைச் சொல்லிச் செலவிடுத்த
மாதுவந்து பின்போன வன்னெஞ்சால்—யாதும்
அயிர்த்தா ளுயிர்த்தா ளணிவதன மெல்லாம்
வியர்த்தா ளுரைமறந்தாள் வீழ்ந்து. 83.

பதப்பிரிவு:—தூது உவந்த காதலனை சொல்லி செல விடுத்த மாது வந்து பின் போன வல் நெஞ்சால் யாதும் அயிர்த்தாள் உயிர்த்தாள் அணி வதனம் எல்லாம் வியர்த்தாள் உரை மறந்தாள் வீழ்ந்து.

பதவுரை.

தூது - தேவர்பொருட்டுத் தூதாக வர
உவந்த - இசைந்த
காதலனை - தன் அன்பனை
சொல்லி-சொல்லவேண்டியவைகளைச் சொல்லி
செல - போக
விடுத்த - அனுப்பிய
மாது - பெண்ணாகிய தமயந்தி,
வந்து - அவனோடு வரும்போது வந்து
பின் - அவனுக்குப் பின்னேயே
போன - அவன் போனபோது போய்விட்ட
வல் - தனது கொடிய
நெஞ்சால் - மனதினால்,
யாதும் - நிகழ்ந்தன யாவையும்
அயிர்த்தாள் - சந்தேகப்பட்டாள்,
உயிர்த்தாள் - பெருமூச்சு விட்டாள்,
அணி - அழகிய
வதனம்எல்லாம் - தன் முகம்முழுவதும்
வியர்த்தாள் - வியர்க்கலாயினாள்;
வீழ்ந்து - தரையில் விழுந்து
உரை - பேச்சையும்
மறந்தாள் - அயர்ந்துபோயினாள்.

விரிவுரை:—தமயந்திக்கு அவள் மனம் செய்தசதி மிகப்பெரியது. அன்னம்வந்து இவளிடத்தில் நளனைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே, அவளோடு உடன்பிறந்து ஒன்றாய்வளர்ந்த அவள் மனமானது அவளை விட்டுவிட்டு ஓடிப்போய் அந்நளனிடத்திலே தங்கிவிட்டது. பிறகு அவன் வந்தபோது கூடவந்து, அன்பின்றி அவன் பிறர்பொருட்டுத் தூது பேசினான் என்பதையும் எண்ணாமல், அவன் போம்போது கூடவே போய்விட்டதென்றால், அப்புல்லியமனத்தின்சபலகுணத்தை என்னென்று சொல்வது. நிகழ்ந்த விஷயங்களைப்பற்றி, இவ்வோடுகாலி மனத்தைக் கொண்டு தான் யோசிக்கவேண்டியவளாயிருந்தாள். மனம் இவ்விதம் மாதரைவிட்டுப் போய்விடுகின்ற வழக்கத்தைக் கம்பர் சீதையைக்கொண்டு செவ்வனே தம்நூலில் சொல்விக்கின்றார். கடிமணம் நடப்பதற்கு முதல்நாள் மாலையில், சீதாபிராட்டி, பொழுதுபுலரும் வரையில் பொறுத்திருக்க ஆற்றாளாகித் தன்மனம் தன்வயமாயிருக்குமாயின் அவ்வாறு பொறுத்திருக்க இயலும் என்று எண்ணி, அதற்காக, தன்னைவிட்டு முன்பு கன்னிமாடத்தில் கண்டபோதே இராமனது காலைத் தொடர்ந்து போய்விட்ட தன் மனதை, அவ்வொரு விரவேனும் தன்னோடு வந்து தங்கியிருக்கும்படி வேண்டுகின்றவளாய் அதன் செய்கையைப் பழித்துத் தன்பால் அழைக்கின்றாள் :—

கருநா யிறுபோல் பவர்கா லொடுபோய்
வருநா ளயலே வருவாய் மனனே
பெருநா ளுடனே பிரியா துழல்வாய்
ஒருநா டரியா தொழிவா ருளரோ.

"கருநிறம் வாய்ந்ததெனினும் காந்தியோடு கூடிய சூரியன் ஒன்று இருக்குமாயின் அதைப்போன்றவர் (இல்பொருள் உவமை அணிக்கு இதுவோர் உதாரணம்) காலோடே கூட அன்றைக்குப்போய், நாளைக்கு அவர் வரும்போது பக்கத்திலே வருவதற்கிருக்கின்ற மனமே, இனி எவ்வளவோ காலம் அவரைவிட்டு அகலாது திரியவேண்டியதாயிருந்தும், இன்றைக்கொருநாள் முன்னராகவந்து என்னிடத்தில் இருந்தாலென்ன! இத்தனை காலம் என்னோடு வாழ்ந்த நீ ஒருநாள் அவரைவிட்டுப் பிரியச் சகியாமல் என்னைக் கைவிடுவது அழகா", என்பது இச்செய்யுளின்கருத்து.

உள்ளம்போய் நாண்போ யுரைபோய் வரிநெடுங்கண்
வெள்ளம்போய் வேகின்ற மென்றளிர்போற்—பிள்
புள்ளரிக்கு நாடன் றிருமடந்தை பூவாளி [ளைமீன்
யுள்ளரிக்கச் சோர்ந்தா ளுயிர். 84.

பதப்பிரிவு:—உள்ளம் போய் நாண் போய் உரை போய் வரி நெடும் கண் வெள்ளம் போய் வேகின்ற மெல் தளிர்போல் பிள்ளை மீன் புள் அரிக்கும் நாடன் திருமடந்தை பூ வாளி உள் அரிக்க சோர்ந்தாள் உயிர்.

அன்வயம்:—பிள்ளைமீன் புள் அரிக்கும் நாடன் திருமடந்தை, பூவாளி உள் அரிக்க, உள்ளம்போய் நாண்போய் உரைபோய் வரிநெடும்கண் வெள்ளம் போய் வேகின்ற மென்தளிர்போல் உயிர்சோர்ந்தாள்.

பதவுரை.

பிள்ளைமீன் - குட்டிமீன்களை
புள் - கொக்கு முதலிய பறவைகள்
அரிக்கும் - தின்னும் தன்மைவாய்ந்த
நாடன் - விதர்ப்பநாட்டையுடைய வீமனது
திரு - அழகிய
மடந்தை - மகளாகிய தமயந்தி,
பூ - புஷ்பங்களாலாகிய
வாளி - (மன்மதனது) பாணங்கள்,
உள் - தனது உள்ளே
அரிக்க - துளைப்பதால்,
உள்ளம் போய் - நினைவு நீங்கி,
நாண் போய் - நாணம் அற்று,
உரை போய் - பேச்சும் சோர்ந்து,
வரி - செவ்வரி கருவரி படர்ந்த
நெடும் - பெரிய
கண் - கண்களில்
வெள்ளம் - நீரும்
போய் - வற்றிப்போய்,
வேகின்ற - நெருப்பில் வேகின்
மெல் - மிருதுவாகிய

188966

தளிர்போல் - தளிரைப் போல்
உயிர் - உயிர்
சோர்ந்தாள் - சோர்ந்துபோனாள்.

விளக்கம்:—மடந்தை - அரிக்க - போய் - போய் - போய் - போய் - தளிர்போல் - சோர்ந்தாள். இந்தப் பதங்களோடு பொருந்திய மொழிகளைச்சேர்த்து வினை விடையாக ஒருதரம் நீங்களே விளக்கம் எழுதிப் பயிற்சிசெய்வது நலம்.

விரிவுரை:—மன்மதனது பாணங்கள் அவளுள்ளே பாய்ந்து குடைந்ததால் உள்ளம் போயிற்று, அதாவது தன்வயம் துறந்தவளானாள். ஆதலாலே இனி அவளுக்கு நாணத்தைக் காக்கமுடியவில்லை. வாயில்வந்தபடி தன்காதலைக் கூறிக்கூறிப் புலம்பினாள். சிறிதுபொழுதில் அப்புலம்பலும் அடங்கிவிட, கண்களிலிருந்து வெள்ளம் பெருகிப்பெருகிப் பிறகு அதுவும் வற்றிப் போய்த் தீயினிடைப்பட்ட தளிரைப்போல் சுருண்டு போயினாள், என்று கவி படிப்படியாக அவள்நிலைமையை வருணித்துக் காட்டினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தமயந்தியை, பிள்ளைமீன் புள்ளரிக்கு நாடன் திருமடந்தை, என அழைத்தது மிகவும் பொருத்தமாயிருக்கின்றது. தன்மேல் காதலில்லாததால் நளன் இவ்வாறு செய்தான் எனப்பேதுற்ற தமயந்தியைக்கண்ட புகழேந்தி அவளது கபடற்ற தன்மையைக் காட்டுவதற்காகப் 'பிள்ளைமீன்களைப் புட்கள் தின்றுவிடுகின்ற நாட்டில் பிறந்தவள்' என்று கூறுகின்றார். ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருத்தல் கொக்கின் குணம். அவ்வாறிருக்கஇவ் விதர்ப்பநாட்டுக் கொக்குக்களுங்கூடச் சாமர்த்தியமற்றனவாய், வந்தமீன் சிறுமீனாயிருந்தாலும் கொத்திவிடுகின்றன என்னின் அந்நாட்டிற் பிறந்து வளர்ந்த இத் தமயந்தியின் கபடற்ற தன்மையைக் கூறவும் வேண்டுமோ.

இவ்வாறு குறிப்பினால் ஒரு விஷயத்தைக் காட்டுகின்ற சொற்றிறத்திற்கு உள்ளுறை உவமம் என்று பெயர். தமயந்தி கபடற்றவள் என்று காட்டவிரும்புகின்ற கவி, "குழந்தைபோல் அவள் சூதுதெரியாதவள்' என்ற இன்னபடி சாதாரண உவமையிற் சொல்லாமல், "கொக்கும் தன் இயற்கைக்குணத்தைவிட்டுச் சிறுமீன்களைத் தின்றுவிடுகின்ற நாட்டில்பிறந்தவள்" என்கின்ற குறிப்பினால் அதன் குணத்தையும் அவளோடு சார்த்திக் கபடற்ற தன்மையை அவளுக்குச் சேர்ப்பிப்பதால் அந்த உவமைதான் வெளிப்படையாயில்லாமல் இத்தனை விஷயங்களுக்கு உள்ளே உறைந்திருக்கும் காரணத்தைப்பற்றி இவ்வாறு கூறுவதற்கு உள்ளுறை உவமம் எனப் பெயர் வந்தது. ஐங்குறுநூறு என்னும் நூலை எடுத்துப் பார்ப்பீர்களானால் ஒவ்வொரு செய்யுளிலும் உள்ளுறை யுவமம் அமைந்திருக்கின்ற அழகைக் காண்பீர்.

ஒருதாரணம் இங்குக் காட்டலாம்:—

திருமணம் முடிந்த சிலகாலத்திற்கப்பால் ஒருவன் தன் நாயகியை விட்டுவிட்டு வேசியர்களைவிரும்பிப் போய்ச் சேர்ந்து தங்கினான். அங்கும் அவன் ஒருத்தியோடே இல்லாமல் ஒருத்தியைவிட்டு ஒருத்தியைப் பற்றி ஒழுகுகின்றான் என்பது மனைவிக்குத் தெரியவந்தது. இப்படிச் சிலகாலம் கழிந்தபின் அவன் பரத்தையர் உறவில் வெறுப்புற்று மீண்டும் தன் மனைவியானவளைத் தன்னை யவள் பொறுத்து ஏற்றுக்கொள்ளும்படி வேண்டச் சில தூதரை யனுப்பினான். அத்தூதர் வந்து இவ்விதம் வேண்டியதுகேட்ட தோழி தன்தலைவிக்குச் சொன்னதாக அடியில் வரும் பாட்டுப் பாடப்பட்டிருக்கின்றது.

தாய்சாப் பிறக்கும் புள்ளிக் கள்வனொடு
பிள்ளை தின்னு முதலைத் தவனூ
ரெய்தின னாகின்று கொல்லோ மகிழ்நன்
பொலந்தொடி தெளிர்ப்ப முயங்கியவர்
நலங்கொண்டு துறப்ப தெவன்கொ லன்னாய்

இப்பாட்டின் முதல் இரண்டடிகள் தலைமகனது ஊரை வர்ணிக்கின்றன. "தாய் சாகப் பிறக்கும் நண்டுகளையும், தன் குட்டிகளையே தின்னும் முதலைகளையும் உடையது அவன் ஊர்" என்பது அர்த்தம். தன்னைச் செய்ததைக் கொல்வது நண்டு. தான் செய்ததைக் கொல்வது முதலை. இவ்விரண்டும் இருக்கின்ற ஊரைச் சேர்ந்தவனாதலால் இவன், தன்னைக் காதலித்த மனைவியை விட்டுச்சென்று தான் காதலித்த பரத்தைகளையும் விட்டு விடுகின்றான் என்ற பொருள் உள்ளே அடங்கியிருக்கின்றது. இது உள்ளுறை யுவமம்.

பூவின்வாய் வாளி புகுந்த வழியேயென்
ஆவியார் போனாலு மவ்வழியே—பாவியேன்
ஆசைபோ காதென் றழிந்தா ளணியாழின்
ஓசைபோற் சொல்லா ளுயிர்த்து. 85.

கருத்து:—"மன்மதன் எய்த புஷ்பபாணங்களால் உண்டான புண்களின் வழியே என்உயிர்தான் போய் விட்டாலும்கூடப் பாவியாகிய எனக்கு நளன்மீது இருக்கின்ற ஆசைமாத்திரம் ஒருநாளும் போகாது" என்று வீணையின் நாதத்தைப்போன்ற சொற்களையுடைய தமயந்திசொல்லிப் பெருமூச்சுவிட்டுஉள்ளங் கரைந்தாள்.

காமநோய் உற்றவர்களுக்கு எல்லாம் விபரீதமாயிருக்கும். சாதாரணமா யிருப்பவர்களுக்குச் சுகம்தருவனவெல்லாம் விரகதாபம் அடைந்தவர்களுக்குத்துன்பத்தை விளைக்குமென்பது கவிகளின் மரபு. சாயங்காலம் சந்திரிகை தென்றல் மலர்ப்படுக்கை சந்தனப்பூச்சு நறுமணம் கடலின்ஒலி இரவின்அமைதி அன்றிலின்குரல் போன்றவைகள் இனிமையோடு மிகவிரும்பி அனுபவிக்கக் கூடியனவாயிருக்கக் காதல்வயப்பட்டுத்தவிப்பவர்கள் இவைகளைவெறுப்பார்கள். குளிர்ந்தபொருள்கள் அவர்களைத் தீயெனச் சுட்டெரிக்கும். அவைகளுக்குஆற்றாது புலம்புவார். அவைகளைப் பழிப்பார். காமக்கடவுளாகிய மன்மதன்தான் இவைகளையேவித்தங்களை வருத்துகின்றானென்று அவனைவைதூற்றுவார். காமத்தால் வருந்துகின்றவர் படுகின்ற விரகவேதனைகளையும், மாலைக்காலம் இரவு தென்றல் சந்திரன் மன்மதன் முதலியன அவர்களது வாய்க்கு இலக்காகி வசையுண்பதையும் கவிகள் வர்ணிக்கின்ற பாகங்கள் எந்தநூலிலும் வெகுஅழகானபாகங்களாக அமைந்திருக்கும். நளவெண்பா சிறுகாவியமாதலால் புகழேந்திப்புலவர் இருபது இருபத்தைந்து செய்யுள்களுக்குள் இந்தச் செய்தியை அடக்கியிருக்கின்றார். அவைகளுள் சிலவற்றை மாத்திரம் நாமிங்கு விளக்குவோம். உள்ளமும் நாணும் போய்த் தமயந்தி உயிரும் உரையும் சோர்ந்திடக்கச் சூரியன் அத்தமித்த செய்தியை அடுத்தசெய்யுள் கூறுகின்றது.

வையம் பகலிழப்ப வான மொளியிழப்பப்
பொய்கையு நீள்கழியும் புள்ளிழப்பப்—பையவே
செவ்வாய வன்றி றுணையிழப்பச் சென்றடைந்தான்
வெவ்வாய் விரிகதிரோன் வெற்பு. 86.

பதப்பிரிவு:—வையம் பகல் இழப்ப வானம் ஒளி இழப்ப பொய்கைஉம் நீள் கழிஉம் புள் இழப்ப பையவே செம்மை வாய அன்றில் துணை இழப்ப சென்று அடைந்தான் வெம்மை வாய் விரி கதிரோன் வெற்பு.

அன்வயம்:—வெம்மைவாய் விரிகதிரோன்—வையம் பகல் இழப்ப, வானம் ஒளி யிழப்ப, பொய்கையும் நீள்கழியும் புள் இழப்ப, செவ்வாய அன்றில் பையவே துணை இழப்ப—சென்று வெற்பு அடைந்தான்.

பதவுரை.

வையம் - பூமி
பகல் - பகல்பொழுதை
இழப்ப - இழக்கவும்,
வானம் - ஆகாயம்
ஒளி - வெளிச்சத்தை
இழப்ப - இழக்கவும்,
பொய்கையும் - தாடகங்களும்
நீள் - நீண்ட
கழியும் - நீர்க்கழிகளும்
புள் - பறவைகளை
இழப்ப - இழக்கவும்,
செம் - சிவந்த
வாய - வாயையுடைய
அன்றில் - அன்றில் பறவைகள்
பையவே - வருந்தும்படி
துணை - தம் இணைகளை
இழப்ப - பிரியவும்,
வெம் - வெப்பம்
வாய் - வாய்ந்த
விரி - விரிந்த
கதிரோன் - கிரணங்களையுடைய சூரியன்,
சென்று - போய்
வெற்பு - மேற்கு மலையை
அடைந்தான் - சேர்ந்தான்.

விளக்கம்:—இழப்ப—இழப்ப—இழப்ப—இழப்ப—சென்று—கதிரோன்—வெற்பு—அடைந்தான், என்று முடித்துக்கொள்க.

விரிவுரை:—சூரியாஸ்தமன காலத்தில் நிகழ்கின்றனவற்றைக் கவி இங்கே கூறுகின்றார். இழப்ப என்ற வினையெச்சங்கள் இங்கே காரியப்பொருளில் வந்திருக்கின்றன. சூரியன் அஸ்தமித்தல் காரணம்; அதனால் உண்டாகின்ற காரியங்கள் இவை.

அன்றில் பறவைகளுக்குள் ஆண்பெண்பற்று வெகு அதிகம். ஒன்றைவிட்டு ஒன்று பிரியச் சகியாது. அப்படிப் பிரிந்தால் கத்திக்கத்திச் செத்துப்போம். செவ்வாய அன்றில் பையவே துணை இழப்ப, என்றது இங்கு,சூரியாஸ்தமனம் ஆவதைக் கவனிக்காமல்தனித்தனி இரைதேடிக்கொண்டிருந்த அன்றில்கள்'இருட்டியபின் வந்து சேரமுடியாமல் வருந்துவதைக் குறிக்கின்றது.

அத்தமனகிரியைச் சேர்ந்த சூரியன் மறைந்துபோவதை அடுத்த செய்யுள் கூறுகின்றது.

மாயிரு ஞாலத் துயிர்காண வானரங்கில்
பாயிரு ளென்னும் படாம்வாங்கிச்—சேயின்
றறைந்தா ரணம்பாட வாடிப்போய் வெய்யோன்
மறைந்தான் குடபால் வரை. 87.

இதனிற்கு அடுத்தசெய்யுள், அந்திக்காலத்தை ஒரு தேவதையாக உருவகப்படுத்தி அவள் வருவதை வருணிக்கின்றது.

மல்லிகையே வெண்சங்கா வண்டூத வான்கருப்பு
வில்லி கணைதெரிந்து மெய்காப்ப—முல்லையெனும்
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை யந்திப் பொழுது. 88.

பதப்பிரிவு:—மல்லிகையே வெண் சங்கு ஆ வண்டு ஊத வான் கரும்பு வில்லி கணை தெரிந்து மெய் காப்ப முல்லை எனும் மெல் மாலை தோள் அசைய மெல்ல நடந்ததே புன் மாலை அந்தி பொழுது.

அன்வயம்:— புன்மாலை அந்திப்பொழுது—மல்லிகையே வெண் சாங்காக, வண்டு ஊத, வான் கரும்பு வில்லி கணைதெரிந்து மெய்காப்ப, முல்லைஎனும் மென்மாலை தோள் அசைய, மெல்ல நடந்தது.

பதவுரை.

மல்லிகையே - மல்லிகை மலர்களே
வெண் - வெண்மையான
சங்கு ஆ - சங்காகவும்,
வண்டு - வண்டுகள்
ஊத - (அச்சங்குகளை) ஊதவும்,
வான் - சிறந்த
கரும்பு - கரும்பை
வில்லி - வில்லாகவுடைய மன்மதன்
கணை - (மலர்களாகிய) பாணங்களை
தெரிந்து - தெரிந்து
மெய் - அந்தியின் மெய்யை
காப்ப - காத்துக்கொண்டு முன் செல்லவும்,
முல்லைஎனும் - முல்லையாகிய
மெல் - மிருதுவான
மாலை - மாலை
தோள் - (தன்) தோளில்
அசைய - அசையவும்,
புன் - அற்பநேரம் இருக்கின்ற
மாலை - மாலைக் காலமாகிய
அந்திப் பொழுது - அந்தியானது,
மெல்ல - மெல்ல
நடந்தது - நடந்து வந்தது.

விரிவுரை:—அந்திமாலை வருவதை ஒரு தேவதை பவனிவருவதற்கு நிகராக் கவி கூறுகின்றார். அந்திக் காலத்தில் நிகழ்கின்ற செய்திகள் அந்தப் பவனிக்கு அங்கங்களாக அமைகின்றன. அந்தியிலே மல்லிகையும் முல்லையும் அலரும். உலாவரும் தேவதைக்குமுன் முழங்கும் சங்குகளாக மல்லிகையை வைத்தார்.

மலர்ந்த மல்லிகையின் தேன் அருந்தி வண்டுகள் ரீங்காரம் செய்யுமாகையால் அவ்வண்டுகள் சங்குகளை ஊதுகின்றவர்களுக்கு நிகராயின. பவனி வருபவர்களுக்கு முன்னால் மெய்காப்பாளர் (body guards) வளைத்த வில்லில் வைத்த அம்பினராய்ச் செல்வார். அந்திக்கு முன்னாலே மன்மதன்வந்து சேர்கின்ற தன்மை நோக்கி அம் மன்மதனை அந்திதேவிக்கு மெய்க்

காப்பாளனாகக் கூறினார். மன்மதனுக்குக் கரும்புவில்லும் மலர்ப் பாணங்களும் உரியன. சாயங்காலத்தில் மலர்கின்ற மற்ற மலர்கள் அவனுடைய அம்புகளாயின. இனி, மாலையில் மலர்கின்ற முல்லையைத் தேவியின் தோளிற்குப் பூமாலை யாக்கினார்.

குறிப்பு:—இந்தச் செய்யுளில் உருவக அணி அமைந்திருக்கின்றது. அதன் இலக்கணத்தை முன், 84-வது பக்கத்திலும், 143வது பக்கத்திலும் காட்டியிருக்கின்றேன். இப்பொழுது மீண்டுமோர் முறை அப்பாகங்களைப் படித்துக் கொள்ளவும். 'அந்திப்பொழுது நடந்தது' என்பதை விரித்தால் அந்திப்பொழுதாகிய ஒரு தேவதை நடந்தது என்று விரியும். அதாவது வருணனையின் நிமித்தம் மாலைப்போது ஒரு தேவதையாக நாம் கருதும்படி உருவகம் செய்யப்பட்டிருக்கின்றது. இவ்வாறே முன் 10-வது செய்யுளில் (84-வது பக்கம்) வசந்தகாலம் வருவதை ஒரு அரசன் வருவதற்கு நிகராக உருவகப்படுத்தியிருக்கின்றார். அதுவும் இதுபோன்ற உருவக அணி. அதற்குப்பின் 21-வது செய்யுளில் (143-வது பக்கம்) தமயந்தியின் பெண்தன்மையை ஒரு இராச்சியமாகவும் அதனை ஆள்கின்ற அரசியே அவளாகவும், அவளது குணங்கள் புலன்கள் ஆபரணங்கள் அவயவங்கள் முதலியன அவ்வரசாட்சியின் சைனியம் மந்திரி முரசு படைக்கலம் போன்ற அங்கங்களாகவும் உருவகம் செய்திருப்பதைக் கண்டீர். ஒன்றை வேறொன்றாக உருவகப்படுத்தி அவ்வுருவகத்திற்குச் சார்பான அங்கங்களையும் வெவ்வேறாக உருவகப்படுத்தி முழுவதையும் ஓரேகருத்தில் அடக்கி முடித்தால் முற்று உருவக அணி ஆகும் என்று சொல்லியிருக்கின்றோம். அதன்படி இந்தச் செய்யுள் முற்றுருவக வணி ஆவது தெரியவரும். உருவகம் ஒரு செய்யுளில் தனியாகவும் வரலாம்; முற்றியும் வரலாம். முற்றுருவகம் ஆகும்போது அதன் அங்கங்கள் தனித்தனி உருவகங்களாக அமைவது அவசியம். "கைம்மலர் வருந்தத் தேவர் கடல் கடைந்தார்" என்ற இடத்தில் கைம்மலர், அதாவது கைகள் ஆகிய மலர், என்பது தனி உருவகம். (அதனையே மலர்க்கை,—மலர்போன்ற கை —என்று மாற்றினால் உவமையணி ஆய்விடும்). அதே மாதிரி, மல்லிகை சங்காகவும், வண்டுகள் சங்கை ஊதுகின்றவர்களாகவும், இங்கே தனித்தனியாய் உருவகம் செய்யப்பட்டிருக்கின்றன.

அன்னவாறு வந்த அந்தி அற்பநேரம் தங்கித் தமயந்திக்குத் துன்பம் விளைத்ததென்பதை அடுத்த செய்யுள் சொல்கின்றது.

புற்கென்றா ரந்தி புனைமலர்க் கண்ணீ ரரும்ப
நிற்கின்ற தன்றோ நிலங்காப்பான்—முற்கொண்
டடைகின்ற வேந்தர்க்கு மாண்டஞ்சி னோர்க்கும்
இடைநின்ற காலம்போ லின்று. 89.

இதன்பின் அந்தியும் தேயத்தேயப் பிறகு பிறைச் சந்திரன் வான்நிலத்திலே தோன்றித் தமயந்தியை வருத்தியது அடுத்த செய்யுளில் தெரிகின்றது.

பைந்தொடியா ளாவி பருகுவா னிற்கின்ற
அந்தி முறுவலித்த தாமென்ன—வந்ததால்
மையார்வேற் கண்ணாள் வனமுலைமே லாரழலைப்
பெய்வா னமைந்த பிறை. 90.

பதப்பிரிவு:—பை தொடியாள் ஆவி பருகுவான் நிற்கின்ற அந்தி முறுவலித்தது ஆம் என்ன வந்ததால் மை ஆர் வேல் கண்ணாள் வன முலைமேல் ஆர் அழலை பெய்வான் அமைந்த பிறை.

அன்வயம்:—மை ஆர் வேல் கண்ணாள் வனமுலைமேல் ஆர் அழலை பெய்வான் அமைந்த பிறை—பைந் தொடியாள் ஆவி பருகுவான் நிற்கின்ற அந்தி முறுவலித்ததாம் என்ன—வந்தது.

பதவுரை.

மை - மையானது
ஆர் - பொருந்திய
வேல் - வேலைப்போன்ற
கண்ணாள் - கண்களையுடைய தமயந்தியின்
வன - அழகிய
முலைமேல் - முலைகளின் மேல்
ஆர் - நிறைந்த
அழலை - நெருப்பை
பெய்வான் - சொரிவதற்கு
அமைந்த - ஏற்பட்ட
பிறை - பிறைச்சந்திரன்,
பை - பசுமையான பொன்னால்செய்த
தொடியாள் - வளையல்களை அணிந்த தமயந்தியின்
ஆவி - உயிரை
பருகுவான் - குடிப்பதற்கு
நிற்கின்ற - காத்துக்கொண்டிருக்கின்ற
அந்தி - அந்தி என்னும் பேய்
முறுவலித்தது - சிரித்தது
ஆம் என்ன - என்று சொல்லும்படி,
வந்தது - தோன்றியது.

கருத்து:—தமயந்தியின் உயிரைக் குடிக்கக் காத்துக் கொண்டிருந்த அந்தியென்னும் அரக்கி, சமயம் வாய்த்ததென்னும் சந்தோஷத்தினால் சிரிக்குமானால் எப்படி அவள் கோரப்பல் தெரியுமோ அப்படிப் பிறைச் சந்திரன் அந்தியில் தோன்றியது.

விரிவுரை:—88-வது செய்யுளில் அந்தியை ஒரு தேவதையாகக் கூறிய கவி இங்கு அதனையே ஒரு அரக்கியாக உருவகஞ் செய்கின்றார். அந்த அரக்கி தமயந்தியினுடைய உயிரைக் குடிக்க வெகுகாலமாகக் காத்திருந்ததாகவும் இப்பொழுது சமயம் வாய்த்ததென்ற சந்தோஷத்தால் சிரித்ததாகவும், அப்படிச் சிரிக்கும்போது தோன்றிய கோரப்பல்தான் பிறைச் சந்திரன் என்றும் இங்குக் காட்டுகின்றார். அரக்கியின் பல்லைப்போல் தோன்றிய பிறையும் அவள்மீது, நிலவையன்றி நெருப்பையே சொரியப் போகின்றது.

அந்தி இவ்விதம் அரக்கியாவதும் சந்திரன் நெருப்பைப் பொழிவதும் எல்லாருக்குமல்லாமல் தமயந்திக்கும், அவள்போன்ற நிலையில் இருக்கின்ற மற்றவர்களுக்கும் மாத்திரமே நேரும்.

காதலுற்ற சீதைக்கு இவ்விதமே அந்திப்போது எமனாகவும் பேயாகவும் பாம்பாகவும் இன்னும் கொடியன பிறவாகவும் தோன்றுகின்றதை இராமாயணம், பாலகாண்டம், மிதிலைக்காட்சிப் படலம் 62-வது செய்யுள் முதல் 67-வது செய்யுள் வரையில் காணலாம். மாணவர் அப்பாகத்தை எடுத்து உரையின் உதவியால் படித்துத் தெரிந்துகொள்ளத்தாமாகவே முயல்வது நலம்.

குறிப்பு:—பருகுவான்-பருக, பெய்வான் - பெய்ய, இவை வான் என்ற முடிவுபெற்ற வினையெச்சங்கள்.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்—5. சூர்ப்பணகைப் படலம்.

[336-வது பக்கத் தொடர்ச்சி]

உருவமு முரைகளுங் கைக்குங் காதலாள்.

அயோத்திமா நகருறை யரசமாதர்தம் ஆயபே ரழகினை, அவர் இராகவன்தன் மணவினைச் செவ்வியைக் காண்பான் விழைந்து மிதிலைக்கு வழிக்கொண்ட நாள் புகழவரும் கம்பர்பிரான்,

ஊக்க முள்ளத் துடைய முனிவராற்
காக்க லாவது காமன்கை வில்லெனும்
வாக்கு மாத்திர மல்லது வல்லியிற்
பூக்கொய் வாள்புரு வக்கடை போதுமே

[உள்ளத்தில் தவமுயற்சியுடைய முனிவர்களால் தடுக்கக் கூடியது மன்மதன் கை வில், என்னும் வாக்கு மாத்திரம் பிரசித்தமாயிருக்கின்றதேயன்றி, அதைப் பொய்யாக்கி முனிவர்களைக் காமவலையில் படுத்துவதற்கு, இங்குக் கொடிகளிலிருந்து பூக்கொய்யும் இவ்வொருத்தியின் புருவத்தின் கோடியே போதுமே]

என்று முன்னர் (பாலகாண்டம் - பூக்கொய்படலம்) வியந்து நகுவாராயினார். 'முனிவராற் காக்கலாவது, என்னுஞ் சொற்றொடர்களின் அமைப்புக் கோடி பெறும். முனிவரால்மட்டுமே காக்க இயல்வது காமன் கைவில், என்றபொருளேபோல், முனிவராலும் காக்க இயலாதது காமன்கை வில், என்ற பொருளும் இதற்குச் செவ்விதின் பொருந்தும். எதிரெதிர் நடக்கும் இவ்விரு வழக்குக்களும் உள. முன்னதைப் பொய்யாக்கவும் பின்னதை மெய்ப்பிக்கவும் ஒருங்கே, இங்குப் பூக்கொய்வாள் புருவக்கடை ஒன்றுமே யமையும் என. இனிதின் இரட்டுற மொழிந்துவிட்டார், உண்மைமுழுமையும் உட்கொண்ட வுணர்வுடைய நம் கவியரசர்.

சூர்ப்பணகையோ இங்கு, ஆயிரம் அயோத்திமாதரினின்று ஆய்ந்து ஆய்ந்து திரட்டிய அழகினோடும், தவவேடம் பூண்டதேயன்றி, ஊக்கமுள்ளத்துடையமுனிவனென்னும் பெயரிற் குரியவனுமாகிய இராகவன் முன் வந்தெய்தி, காமனுக்குக் கைத்துணையாய்த் தன் எழிலின் ஆயுதங்கள் அத்தனையும் வீசுகின்றாள். எனினும், கல்லேனும் ஒருகாலத்தி லுருகும், இக்காகுத்தன் கருத்தோ காமத்திற் குடைந்து சிறிதேனுங் கரையவில்லை. இப்படி, இராமனது உள்ளத்தின் ஊக்கத்தை உயர்த்துவதற்குக் கம்பர் இவ்வரக்கியை அரம்பையரில் மிக்கதோர் அழகியாய் மாற்றினார். இராமபிரானது நற்குணக் கடலிலே இடைவிடாதெஞ்ஞான்றும் ஆடித்திளைத்து மகிழ்கின்ற நினைவினராதலின் கம்பர் அவ்விராமனது உயர்வினைச் சிறப்பிக்குமாறு சூர்ப்பணகைக்கோர் பேரழகினைச் சூழ்வாராயினார். காமத்தைக் காக்கின்ற பெருமை கம்பர் கண்முன் நின்றதெனின், காமத்தால் மதியிழக்கும் கயமையே வான்மீக முனிவரது கருத்தில் உறுத்தியிருந்தது. ஆதலின்,

"சூர்ப்பணகைக்கும் இராமனுக்கும் எவ்வளவு தூரம்? அவரது சுகமுகமெங்கே, இவளது துர்முகமெங்கே? அவரது குறுகிய வயிறெங்கே, இவளது சரிந்த பெருத்த வயிறெங்கே? அவரது நீண்ட பெரிய கண்களெங்கே, இவளது விகாரமான கண்களெங்கே? அவருடைய அழகிய குஞ்சியெங்கே, இவளது சிவந்து விரிந்த கூந்தலெங்கே? கண்டோர் மனத்தைக்கவரும் அவரது வனப்பு எங்கே, எல்லோரும் நடுங்கத்தக்க இவளது கோரமான உருவம் எங்கே. அவரது இனிய குரல் எங்கே, இவளது பயங்கரமான குரலெங்கே. அவரது இளமையெங்கே, இவளது மூப்பு எங்கே? அவரது இனிய பிரியவசன மெங்கே, இவளது வன்சொல்லெங்கே? அவரது அறநெறியெங்கே, இவளது மறநெறியெங்கே? இராமரோ அழகுள்ள சுந்தர புருஷர்; சூர்ப்பணகையோ வெகு விகாரமான அரக்கி. இவ்வளவு வித்தியாசங்கள் காமத்தால் கட்டுண்டவர்களுக்குத் தோற்றுமா" என்று வடநூன் முனிவர் தம்முடைய சிந்தையைத் தெரிவிக்கின்றார். இதன்படி நோக்குங்கால், மதியிழந்த சூர்ப்பணகையை, கண்டோர் கண் புளிக்கும் உருவினோடும், இராமனுக்குமுன் அவர் கொணர்ந்த பரிசுந் தக்கதாயது.

இனி, இராமனுக்கும் சூர்ப்பணகைக்கும் இடையே நிகழ்ந்த உரைகளையும் நாடகத்தையும் முதலில் முதனூலிற் குறித்தபடி தெரிந்துகொள்ளல் நலம். வரைகின்றார் வான்மீக முனிவர்:—

சூர்ப்பணகை இராமரைக்கண்டு மயங்கி, அவரை நோக்கிச் "சடைமுடி தரித்துத் தவவேடம் பூண்டு வில்லேந்திக் கொண்டு மனைவியுடன் ராக்ஷசர்கள் சஞ்சரிக்கும் இந்த இடத்துக்கு ஏன் வந்திருக்கிறீர்? நீர் வந்த காரணமென்ன? அதின் உண்மையை எனக்குச் சொல்லவேண்டும்" என்று வினவினள். இவ்வாறு அரக்கியாகிய சூர்ப்பணகை தம்மைக்கேட்கவே, எல்லா விஷயங்களையும் நேரியனவாக எண்ணுங் குணமுள்ள இராமர் அவளைப் பார்த்து, "இந்திரனுக்கொப்பான பராக்கிரமம் பொருந்திய தசரதர் என்ற மன்னவரொருவ ரிருந்தார். நான் அவருடைய மூத்த குமாரன். என்னை இராமன் என்று சொல்லுவார்கள். அதோ இருக்கிறாரே அவர் என் தம்பி லக்ஷ்மணர். எப்பொழுதும் என்னைச் சார்ந்து நிற்பவர். இவள் என் மனைவி; சீதை இவள் பெயர். நாங்கள் எங்கள் தாய்தந்தையர்கள் உத்தரவுப்படி அறம்வளர்க்க இக் காட்டிற்கு வந்திருக்கிறோம். நீ யார் என்று அறிய விரும்புகிறேன். நீ யார் மகள்? உன் பெயர் யாது? நீ யாரைச் சேர்ந்தவள்? மனோகரமான உருவமுடைமையால் நீ அரக்கிபோலும். நீ இங்கு வந்த காரண மென்ன? அதை உள்ளபடி சொல்லவேண்டும்" என்று கூறினார்.

இதைக்கேட்டுக் காமத்தால் வருத்தப்பட்டுக்கொண்டிருந்த சூர்ப்பணகை இராமரைப்பார்த்து, 'கேளும் இராமரே, நான் உண்மையைச் சொல்லுகிறேன். நான் சூர்ப்பணகை என்னும் அரக்கி. இஷ்டப்படி உருவங்கொள்ளுஞ் சக்தி எனக்குண்டு. பார்ப்பவர்கள் உள்ளத்தை நடுங்கச் செய்து கொண்டு நான் இந்தக்காட்டில் தனிமையாக எப்பொழுதும் சஞ்சரிப்பவள். இராவணன் என் தமையன். அவன் வெகு பலசாலி; அரக்கர்களுக்கெல்லாம் இறைவன். அவ்வீரன் விசிரவசுவுடைய குமாரன். அவனைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். எப்பொழுதுந் தூங்கிக்கொண்டேயிருக்கும் மகா பலம்பொருந்திய கும்பகர்ணனும், ராக்ஷசகுலத்தில் பிறந்தும் வெகு தர்மாத்துமாவாய் ராக்ஷசகுணமேயில்லாத விபீஷணனும், போரில் கீர்த்திபெற்ற கரனும் தூஷணனுமாகிய இவர்களெல்லாரும் என் சகோதரர்கள். நான் இவர்கள் எல்லாரையும் விட்டுவிட்டு என்னிஷ்டப்படி சஞ்சரிக்க வல்லவள். இராமரே, நான் தங்களைக் கண்ட மாத்திரத்தில் தாங்கள் எனக்குப் புருஷனாகவேண்டுமென்று எண்ணங்கொண்டு தங்களிடம் வந்திருக்கின்றேன். நான் வெகு பலமுள்ளவள். என்னுடைய மகாபலத்தால் என்

ணிஷ்டப்படி எங்கும் சஞ்சரிக்கவல்லவள். என்றென்றைக்கும் என் கணவராகத் தாங்கள் ஆகவேண்டும். சீதை உங்களுக்கு என்ன செய்யப்போகிறுள். வெகு விகாரமும் அவலக்ஷணமுமுள்ள சீதை உங்களுக்குச் சரியான மனைவியல்லள். நான்தான் தங்களுக்கு எற்ற மனைவி. ஆகையால் நீங்கள் என்னை மனைவியாக ஒப்புக்கொள்ளுங்கள். மகா விகாரமுள்ளவளும், கெட்டவளும், குரூபியும், சரிந்தவயிறுள்ளவளும், மனிதப்பிறப்பினளுமான இச்சீதையைத் தங்களுடைய தம்பி லக்ஷ்மணனுடன் சேர்த்து நான் புசித்துவிடுகிறேன். அதன் பிறகு என் கணவரே, அநேக மலைகளின் சிகரங்களையும் அநேக அரணியங்களையும் என்னுடன் கூடப் பார்த்துக்கொண்டு தாங்கள் சுகமாகச் சஞ்சரிக்கலாம்'' என்றனள்.

மயக்கங்கொண்ட சூர்ப்பணகை இவ்வாறு சொல்ல, பேசுவதில் வெகுசமர்த்தரான இராமர் சிரித்து அவ்வரக்கியைப்பார்த்துச் சொல்லத்தொடங்கினுர்.

இவ்வண்ணம் காமவலையில் கட்டுண்டு பேசின சூர்ப்பணகையைப்பார்த்து இராமர் சிறிதுமுறுவலித்துப் பரிகாசமாகக் கூறலுற்றுர்:—''மெல்லியலே, நான் கல்யாணமானவன். இவள் என் மனைவி. உன்னைப்போன்ற மங்கையர்கள் மாற்றவளைக்கண்டால் சகியார்கள். என்தம்பி லக்ஷ்மணன் மிகநல்லவன்; அழகுள்ளவன்; நல்ல பாக்கியவான். அவனுக்கு மனைவியில்லை. அவன் அதிபலசாலி. அவன் மனைவியாற் பெறும் இன்பத்தை அறியான்; சிறுபிராயத்தான். உன்னுடைய அழகான உருவத்துக்கு அவன்தான்சரியான புருஷன். ஆகையால் மேருமலையைச் சூரியனுடைய கிரணம் போய் அடைவதுபோல நீ அவனைப் புருஷனுக அடைந்தால் சக்களத்திபய மில்லாமல் இருக்கலாம்.'' இவ்வாறு இராமர் சொல்லவே, காமத்தால் மோகித்திருந்த சூர்ப்பணகை உடனே அவரை விட்டுவிட்டு விரைவாக லக்ஷ்மணரிடமோடி அவரைப்பார்த்து ''வெகுவழகான உருவம் படைத்த தங்களுக்குத் தகுந்த மனைவி நானொருத்தியே. தாங்களும் என்னுடன் சுகமாகத் தண்டகையின் இடமெங்கும் சஞ்சரிக்கலாம்'' என்று சொன்னுள். இவ்விதமாகத் தம்மைப் பார்த்துச் சூர்ப்பணகை சொல்ல, பேசுவதில் சமர்த்தராகிய லக்ஷ்மணர் புன்னகைசெய்து அவளை நோக்கி, ''தாமரைபோன்ற அழகான நிறமுள்ள மாதே, நான் சுவதந்தரம் உள்ளவனல்லன். என் தமையனுருடைய தாஸன். தாஸபூதனுன எனக்கு நீ மனைவியாகுவது நன்ருகவிருக்கவில்லை.மிக்க சிறுபெண்ணுகிய நீ உன் மனோரதங்களை நிறைவேற்றிக்கொள்ள விரும்பின் வெகு பாக்யசாலியான என் தமையனுருடைய மனைவி யாகிவிடு. அதி குரூபியும், கெட்டவளும், அழகற்றவளும், சரிந்தவயிறுள்ளவளும், கிழவியுமாயிருக்கிற சீதையை அவர் கைவிட்டு உன்னையே மணம் புரிவார். நிகரற்ற நேரிழையே, வருணிக்க முடியாத அழகமைந்தவளே, கொஞ்சமாவது பகுத்தறிவுள்ள ஒருவன், இவ்வித லாக்கியமான வடிவத்தைத் தனக்கு வேண்டாமென்று தள்ளிவிட்டு மனிதசாதியில் பிறந்த மாதினிடத்திலும் அன்புவைப்பானு'' என்று கூறினுர். இது பரிகாசம் என்றறியும் புத்தியில்லாத, சரிந்த வயிறுடைய அக்கொடிய ராக்ஷசி அவர்சொன்ன சொல்லை உண்மையென்றெண்ணிக் காதலால் மயங்கிச் சீதாதேவியுடன் பர்ணசாலையில் உட்கார்ந்திருந்த, தெவ்வரை அடக்கும் திறலுடைய, நிகரற்ற பராக்கிரமமுள்ள இராமரை நாடிச்சென்று அவரை நோக்கி, ''இந்த அழகற்ற, கெட்ட நடக்கையுள்ள, சரிந்த வயிறுள்ள கிழவியை மனைவியாக அடைந்திருக்கிறபடியால் தாங்கள் என்னிடம் அன்பற்றிருக்கிறீர்கள். மனுஷியாகிய இப்பேதையை நானிதோ தாங்கள் பார்த்துக்கொண்டிருக்கப் புசித்துவிடுகிறேன். அதன் பிறகு சக்களத்தி பயமின்றி நான் தங்களுடன் கூடச் சுகமாக வசிக்கின்றேன்'' என்று சொல்லி, எரிகிற அக்கினி போன்ற கண்ணையுடைய அவ்வரக்கி வெகு கோபத்துடன் உரோகிணி நக்ஷத்திரத்தை ஒரு தூமகேது சீறிச் செல்லுவதுபோல மான்போன்ற பார்வையுடைய சீதையை நோக்கி ஓடினுள். காலபாசத்துக்கொப்பாக அவ்வாறு ஓடிவரும் அரக்கியை வலிமிகுந்த இராமர் தடுத்து வெகு கோபங்கொண்டு லக்ஷ்மணரைப் பார்த்து, ''லக்ஷ்மணு, கொடிய குணமுள்ள துஷ்டர்களுடன் விளையாடல் ஒருபொழுதும் கூடாது. சீதையினுடைய உயிருக்கு நாசம் வரப்பார்த்தது. குரூபியும், கொடியவளும், மதம் பிடித்தவளும், வயிறு பெருத்தவளுமான இந்த ராக்ஷசியை உவருங் குலைத்துவிடு'' என்றுர். இராமர் அவ்வாறு சொல்ல, லக்ஷ்மணர் சூர்ப்பணகையைப் பார்த்து வெகு கோபங்கொண்டு தமது கத்தியையெடுத்து அவளுடைய காதுகளையும் மூக்கையும் அறுத்துவிட்டார். தனது மூக்கும் காதும் வெட்டுண்டவுடன் சூர்ப்பணகை வெகு பயங்கரமாகக் கதறிக்கொண்டு தான் வந்தவழியாகவே காட்டுக்குள் ஓடினுள். மகா கோரமுள்ள அவ்வரக்கி அங்கபங்கமடைந்தவுடன் தேகமெல்லாம் இரத்தம் வழிந்தோட மழைக்காலத்தில் மேகமொலிப்பதுபோலச் சத்தமிட்டுக் கொண்டு தனது கைகளை மேலே உயர்த்திக்கொண்டு காட்டில் புகுந்தாள். அதன் பிறகு அவள், கரன் என்ற தனது தமையனிருந்த ஜனஸ்தானத்துக்குச் சென்று ராக்ஷசர்கள் சூழச் சபையில் பயங்கரமாக விளங்கிக்கொண்டிருந்த அவன் முன்பாக ஆகாசத்திலிருந்து இடிவிழுவதுபோலப் போய் விழுந்தாள். அதன்மேல் அவள் பயத்தாலும் மோகத்தாலும் மூர்ச்சையடைந்து அதுதெளிந்தவுடன், அவனுக்கு, சீதாலக்ஷ்மணர்களோடு இராமர் பஞ்சவடியில் வந்திருப்பதையும் தான் அங்கபங்கமடைந்த கதையையும் தன் மேல் இரத்தமோடும் வகையையும் மற்றெல்லாச் சமாசாரங்களையும் தெரிவித்தாள்.

பெருவயிற்றரக்கி இராமன்முன் வந்து நின்றனள். ''நீ யார், நீ யார்'' என்று ஒருவரை யொருவர் வினவித் தெரிந்துகொண்டனர். காமமயக்கத்தில் மதியிழந்திருந்த கயத்தி அவள்; இராமஇலக்குமணர்கள், ''பேசுவதில் மிகவும் சாமர்த்தியமுள்ளவர்'' சீதையைத் தின்ற வயிற்றேடும் இராமனைச் சேர்வாளென்று தன் காதலை விளம்பினுளவள்; இராமன் அவளுக்கு இலக்குவனைக் கைகாட்டித் தந்தனன்; இலக்குவனும் மீண்டு மவளை இராமன்பால் ஏவினுன். துதிநிந்தையாய்ச் சூர்ப்பணகையும் நிந்தைத்துதியாய்ச் சீதையையும் பகர்ந்து, பாவிற்படு குழல்போல் அச்சழக்கியை இருபுறத்தும் தூரத்த இறுதியிலவள் சீதை ஒருத்தியே தன் காமத்திற்கிடையூறு யிருக்கின்றுளெனப் புன்மதியாதற் சிந்தித்து அன்னவளை விழுங்கியொழிக்க எழுதலும், கொடியோருடன் விளையாடுவதன் கெடுதியை அப்பொழுதே உணர்ந்த இராமன் ஏவியபடி இளையோன் அவளை உருவங்குலைத் தோட்டி விட்டான். இவ்வண்ணம் அவ்வரக்கி தன் மூக்கையுங்காதையும் காமவெந்தழலில் உகுத்துவிட் டோடும்படி இதனையோர் சிறுவேலையாய் வான்மீகிமுனிவர் தீர்த்துவிட்டார். உருவத்தால் மட்டுமன்றி உரையினுலும் தன்னை எவரும் நயவரவண்ணம் சூர்ப்பணகை தன் காதலுக்கு வழியுந் தேடிய இப்பரிசு கதைமுறை நவிற்சிக்குப் போதுமேனும் நாடகத்தின் நயமுடைய நிகழ்ச்சிக்குச் சிறிதேனும், சாலாதென்னக் கலைநலமிகுந்த கம்பர், கண்கவர் வனப்பினேடு பெண்ணெனும் நலமெலாம் பொலிவதன்றியும், சொல்லும் பொருளும் தேன்போற் பிலுற்றச் சூர்ப்பணகையை அவ்வடவியி னரங்கினுடனுழைத்துவந்து, மென்மையும் இனிமையும் குழைந்ததோர் தனியழகுவாய்ந்த பாசுரங்களால் காட்சியைத் துவக்குகின்றுர்.

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

— பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

தமிழகராதி ஆதார நூற்றெகுதி
நாம தீப நிகண்டு.

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா 2-0-0

அரும்பொருள் விளக்க நிகண்டு.

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல்லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா 1-4-

கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா 0-6-0

களவியற் காரிகை.

ஒரு சிறந்த அகப்பொரு ளிலக்கண நூல்; முதன் முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களையுடையது. தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 3-0-0

நூற்பொருட் குறிப்பு.

1. இறையனுர் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிக இன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 10-0-0

இராஜசுந்தரம்.

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா 0-8-0

கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை சென்னை.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

குழந்தைகளுக்கு:

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,

''பால சுதா'' (Reg.)

அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:

சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்

ஜீவஸுதா (Reg.)

பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.

டிப்போ: பம்பாய். கல்கத்தா.

''நஞ்சன்கூடு பல்பொடி''

பிராஞ்சு: மதுரை. காஞ்சீபுரம்

எமாங்கத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,
எழுதியவோர்

செந்தமிழ்க்காதை.

கலாநிலயம். வேளாளர் வீதி. புரைசைவாக்கம். சென்னை. விலை ரூ. 1—4—0

கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

தலையங்கங்கள்:—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச் சோதனை 8. விஷபத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு மூபல வேண்டா. விளம்பினால் வெட்கக்கேடு. கல்லாதவர்களை நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார் திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது, உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி. அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

குறுந்தொகை:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச் சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

இலஞ்சிப்பாவை:—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இனவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடம்:—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்:—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

1931-வது வருடம் 4-வது வால்யூம்.

தலையங்கம்:—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4 மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

சூளாமணி:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

யாப்பிலக்கணம்:—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆண்டாள்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், பௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

பிஸாரோ நாடகம்:—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடக மொழிபெயர்ப்பு.

நவராத்திரி நாடகம்:—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

சிதம்பரதேவர் சரிதம்:—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் காவல்.

களவியற் காரிகை:—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

கந்தபுராணமும் சங்க நூல்களும்:—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கடடணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி, பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

வர்த்தமானம்

ஏப்பிரல் மாதம் 29-ந் தேதியோடு முடிந்த ஒரு வாரத்தில் இந்தியாவினின்று ஏற்றுமதியான தங்கத்தின் மதிப்பு 90 லட்ச ரூபாயாகும் என்று பம்பாய்ச் செய்தி கூறுகின்றது.

***

ஐந்து கண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள இவ்வுலகத்தில் ஆறுயிரங்கோடி ஜனங்கள் சுகமே வாழ்வதற்குப்போதிய இடமுளதென்றும், ஆனால் இப்பொழுது உலகத்தில் இருக்கும் மக்கள் தொகுதி 100 கோடிதான் என்றும், ஒருபூகோள நூல் நிபுணர் கூறுகின்றார்.

***

கிறிஸ்தவர் வேதமாகும் பைபில்களுக்கு இப்பொழுதுள்ள மொழிபெயர்ப்பு, சிறந்ததன்றென பைபில் சங்கத்தார் முடிவு செய்து, புதிய மொழிபெயர்ப்பு ஒன்றைத் தயார் செய்துவருகின்றனர் என்றும் அப்புத்தகம் சீக்கிரத்தில் வெளிவரும் என்றும் தெரிகின்றது.

***

பிரிட்டிஷ் பார்லிமெண்டு சபையில் இந்தியா மந்திரி சாமுவல் ஹோர் என்பார் சமீபத்தில் இந்திய நிலையைப்பற்றிப் பேசியபொழுது அவர் கூறியதாவது:—1932-ம் வருடம் ஜனவரி மாத முதல் மார்ச்சு மாத முடிவுவரை சட்டமறுப்பு இயக்கம் சம்பந்தமாக 40,000 பேர் சிறை சென்றுள்ளார். மார்ச்சு மாதம் சிறைசென்றவர் தொகை 7000.

***

பினாங், சிங்கப்பூர், மலாக்கா நாடுகளில், ரப்பர் விலையும், ஈயத்தின் விலையும் நாளுக்குநாள் மிகவுங்குறைந்து வருவதால், அந்நாடுகளின் பொருளாதாரநிலை குலைந்துவருகின்றது. அந்நாடுகளுக்குப் பிழைக்கச்சென்ற ஏழைத் தொழிலாளர்களுக்கு இப்பொழுது வேலையிலாதுபோயது. எனவே 10 ஆயிரம் தொழிலாளருக்குமேல் சீக்கிரம் திரும்ப நேரிடுமென்றும், சமீபத்தில் நாகபட்டணம் துறைமுகம் வந்த ரஜூலா என்னும் கப்பலில் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வந்திறங்கினர் என்றும் தெரிகின்றது.

***

'ஸ்ரீமதி சரோஜினி நாயிடு, போலீசார் பிறப்பித்த தடையுத்திரவைமீறி டில்லி காங்கிரஸிற்குச் செல்லப் பிரயாணமான குற்றத்திற்காகவும், ஸ்ரீ மதன்மோகன் மாளவியா அலகபாத்திலிருந்து மோட்டாரில் டில்லி நோக்கிச் செல்லுகையில் அவசரச் சட்டப்படியும் கைது செய்யப்பட்டனர். சரோஜினி நாயிடுவிற்கு ஒரு வருடக் காவல்தண்டனை விதிக்கப்பெற்றுளது. ஸ்ரீமாளவியா பந்தோபஸ்தில் இருந்து வருகின்றார்' என்று தெரிகின்றது.

***

மரணத்தின்போது உடலைவிட்டுப் பிரிகின்ற ஆவியைப் படம்பிடித்துவிடலாம் என்று இத்தாலிய அறிஞர் புரொபஸர் டக்வி என்பார் கூறுகின்றார். வெரோனா என்னுமிடத்தில் அவ்வறிஞர் ஆயிரக்கணக்கான ஜனங்களைக் கொண்ட கூட்டத்தில் தமது ஆராய்ச்சியைப்பற்றியும், ஆவியைப் படம் பிடிக்கத் தாம் கண்டுபிடித்துள்ள கருவியைப்பற்றியும் விளக்கினராம். அக்கருவிகொண்டுதாம்பிடித்துளபடங்களையும் காட்டினராம். அறிஞர் பலரைக் கொண்ட ஒரு கமிட்டியார் இவர் ஆராய்ச்சியைப் பற்றி விசாரித்து ஒரு முடிவு செய்வார்கள், என்று இத்தாலியச் செய்தி கூறுகின்றது.

மக்கள் பரிதாபநிலை:—ஜேம்ஸ் ரீட் என்னும் ஓரறிஞர், மக்கள் கடவுளை மறந்து நாத்திகராய் வாழ்கின்ற பரிதாபநிலையைப்பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்:-

உலகத்தில் இப்பொழுது மாந்தர் ஆஸ்திக புத்தியின்றியும், பாரமார்த்திக வழியில் மனதைச் செலுத்தாதும் உலோகாயத வழியில் படர்ந்து தங்கள் வாழ்நாளையும், பின்வரும் சந்ததியார் வாழ்நாளையும் கெடுக்கின்றனர். கீழ்நாடாகட்டும் மேல்நாடாகட்டும் எங்கும் நாத்திக நினைவே அதிகரித்து வருகின்றது. இளைஞர்கள் நிலையோவெனில் நெறிமாறிச் செல்கின்றனர். பெரியோர்கள் நேரானநெறி எதுவென்றுதெரியாதிருக்கின்றனர். இளைஞர்க்குவாழ்வின்நோக்கம்புலன்களின் விழைவினிற்குரியன தேடுவதே என்றாய்விட்டது. இதன்முடிவு போட்டியும் ஓட்டமுமே. இத்தகைய வாழ்வினில் படிந்தோர்க்குக் கடவுளை நினைக்க நேரமில்லை. மோசம், அகம்பாவம், அவநம்பிக்கை இவைகளே வாழ்க்கையின் தத்துவம். தாயைப் பிள்ளையும், அண்ணனைத் தம்பியும், கணவனை மனைவியும் நம்புவதில்லை. சந்தேகத்தில் படர்கின்றவாழ்வுகுடும்பவாழ்க்கையைக் குலைத்துவிட்டது. அன்பினிற்கு இடமிலாதுபோயது. எனவே எஞ்சுவது துவேஷமும்பூசலும்; ஆதலால்கடவுளுக்கு இடமில்லை. மாந்தர்பயில்கின்ற துறைகளிலெல்லாம் வாய்மைக்கு வழியிலாது போய்விட்டது. இனி, சிறுமனிதர்களால் உலகத்தை நிலைக்குக்கொண்டுவரமுடியாது. மகா புருஷன் ஒருவர் தோன்றித்தான் உலகத்தை உய்விக்கவேண்டும். எல்லோரும் அம்மஹான்வரவிற்குப் பிரார்த்தனை செய்யவேண்டும். இதுவே நாம் இப்பொழுது கைக்கொள்ள வேண்டிய கருமம்.

***

இளைஞர் கடன்:—சமூகநலச்சங்கக் கூட்டமொன்றில் வேல்ஸ் இளவரசர் பேசியதாவது:—"இதுபோது நம் நாடு இன்னல் பலவற்றால் வருந்துகின்றது. இன்னல்கள் அறுமாறு இளைஞர்களும் முதியோரும் முயன்றும் வருகின்றனர். அரசியல் மாற்றமும், வியாபாரப்பெருக்கமும், செல்வநிலை மிகுதியும் நாட்டின் முன்னேற்றத்தின் உண்மையான அறிகுறிகள் ஆகா. பார்வைக்கு அழகாக இருக்கும் வீடொன்று அடமானத்தில் இருக்கலாமல்லவா?

எனவே மக்கள் வாழ்வு சிறக்கவேண்டுமெனின், அரசாங்க முயற்சியும், செல்வப்பெருக்கும் போதா. ஒவ்வொரு மனிதரும் தன்னினும் கீழுள்ளமக்களுக்கு உதவிசெய்யும் தர்மத்தைக் கைக்கொள்ளவேண்டும்.

தற்காலம் உலகம் சந்தேகத்திலும் அச்சத்திலும் பயில்கின்றது. மாந்தரிடம் தைரியம் என்பது கிடையாது. விளைபொருளும் செய்பொருளும் அதிகரித்திருக்கையிலும் துன்பமும் திகைப்புமே எங்கும் காணப்படுகின்றன. மனிதனைக் கண்டு மனிதன் சந்தேகப்படாமற் சகோதரப் பான்மையுடன் மனித விவகாரம் ஏற்படுமேல் நாட்டின் பாதிப் பிரச்சினைகள் அற்றுவிடும்.

நம் நாட்டில் இப்பொழுது வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துளது. அரசாங்க முயற்சியெல்லாம் இந்நிலையை மாற்றுவிக்கவில்லை. எனின் நாம் செய்யவேண்டுவதென்ன? வேலையில் இருப்பவர், தனவந்தர், வேலையில்லாதிருக்கும் தம் அண்டை வீட்டுக்காரனுக்கு உதவி செய்யவேண்டும். மாந்தரிடம் தர்மசிந்தனை ஏற்புடன் [illegible]ன் வளர்ச்சி சுலபம். எனவே மக்[illegible]சேவையில் ஈடுபடுவார்களா

KALANILAYAM.
Reg. No. M. 2324.

ஆங்கில ஆசான்

எமதுலேடி டிரேட் மார்க்கைப்பார்த்து வாங்குங்கள்.

60 நாட்களில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக் கூடிய அப்பியாசப் பாடங்களாக வகுத்து முன் பதிப்புக்களைவிட அதிகப் பக்கங்கள் சேர்த்துப் பெரிய எழுத்துகளில் அச்சியற்றி யுள்ளோம். இதுவரை 53100 புத்தகங்கள்செலவாயுளது இதன் மேன்மைக் கடையாளம். இப் பத்தாம் பதிப்பு ஆங்கில வாசனைப்போல், வேறு எப்புத்தகமும் சீக்கிரத்தில் ஆங்கிலம் கற்றுக்கொள்ள உதவாது. நம் முன்பதிப்புப் புத்தகங்களை வைத்திருப்பவர் கூட 10-வது பதிப்பை வாங்கவேண்டும். இதில் 1 அணு முதல் 3000 ரூபாய் வரைச் சம்பளம் வாடகைக் கணக்குளது. 800 பக்கங்களுக்கு மேற்கொண்ட அழகிய சீமைக் கலிக்கோ பயிண்டுடையது.

விலை ரூ 2.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

— திருக்குறள் —

மூலமும் சொற்றுறிப் பகராதியும்
விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கபபட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை அணு 12. வி. பி. செலவு வேறு.

கலாநிலயம், புரசை, சென்னை.

ஆ. ஸி. கஸ்தூரிரங்கய்யர் B.A., L.T.,
இயற்றிய

:: பாகவத வினு விடை ::

சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்ட 550 பக்கங்களும் 20 சித்திரப்படங்களும் கொண்டது. விரிவான அட்டவணையும், கிருஷ்ண லீலை, லீலா சுகர் கதை போன்ற பலமுக்கியமான விடயங்களின் மெய்க்கருத்தை விளக்கும் அநுபந்தங்களும் அடங்கியுளது. விலை ரு. 2

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை,
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

அலங்காரம்—அழகு—ஸ்நானம்
இவைகளுக்கு எங்கள்

:: மணித் தைலம் ::

மிகச் சிறந்தது. ஆயுர்வேத முறைப்படி தயார்செய்யப்பட்டது. 50 வருஷங்களாகப் புகழுடன் உலாவிவருகிறது. தலைமயிரை உதிராமற் தடுத்து நீளமாக வளரச் செய்யும். முகத்திலுண்டாகும் வடுக்களையும் பருக்களையும் நீக்கும். உஷ்ணத்தைச் சமனஞ்செய்யும்.

5 துலாம் தைலம் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 1
5 புட்டிகள் விலை ரூ. 4

ஆரோக்கிய கிரந்தம் இனும்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Policies Issued in 1931 for over	Rs. 1,32,33,000
Showing an increase over the New Business figure for 1930 of	16.54 %
Claims paid up to end of 1931 over	Rs. 90,00,000
Invested Funds amount to over	Rs. 1,75,00,000

LOW RATES — LIBERAL CONDITIONS
NEW TABLES — NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ. 18—0—0

காரநேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம்
வி. விச்வநாத பிள்ளை இயற்றியது 676 பக்கங்கள் கொண்டது.
ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலாநிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)